பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 16 செவ்வாய்க்கிழமை (29.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :123

# சுமாத்திராவில் பெரும் பூகம்பம்! ஆசியா எங்கும் 'சுனாமி' பீதி!!



சில இடங்களில் 'சைரன்' ஒலி எழுப்பப்பட்டது. இன்னும் சில இடங்களில் கோயில்கள், தேவாலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டன. உறக்கத்தில் இருந்த மக்கள் பதறி அடித்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். இன்று அதிகாலை யாழ்.நகரின் கரையோரப் பகுதியில் இருந்து வெளியேறி வந்து ஓ.எல்.ஆர். தேவாலயத்தில் தங்கியிருந்த மக்களைப் படத்தில் காணலாம். (படம்: பிரபா)

## கரையோரப்பகுதிகளில் மக்கள் இரவோடு இரவாக வெளியேற்றம்

ஜகார்த்தா,மார்ச்29

**இந்து சமுத்திரத்தில் - இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுப் பகுதியை - அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியிருக்கின்றது. ரிச்டர் அளவில் எட்டுப் புள்ளிக்கு மேல் பதிவாகிய இந்த நில நடுக்கத்தை அடுத்து 'சுனாமி' கொலை அலை அனர்த்தம் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதால் ஆசிய நாடுகள் எங்கும் பெரும் பீதி கிளம்பியது. இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் கரையோரப் பகுதிகளில் இருந்து மக்கள் இர வோடு இரவாக வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். எனினும், இன்று அதிகாலை இந்தச் செய்தி அச்சுக்குப்போகும் வரை எந்தநாட் டின் கரையையும் ஆழிப்பேரலைகள் தாக்கியதாகத் தகவல் இல்லை.**

இலங்கை நேரப்படி நேற்றிரவு 10 மணியளவில் (இந்தோனேசிய நேரம் 11.09) இந்தப் பூகம்பம் நிகழ்ந்தது. சுமாத்திரா தீவை மையமாகக் கொண்டு கடலில் நிகழ்ந்த இந்தப் பூகம்பம், ரிச்டர் அளவில் 8.2 புள்ளி என முதலில் பதிவானது. எனினும், பின்னர் அது 8.5 என்றும் 8.7 என்றும் பதிவானதாக வெவ்வேறு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கரையோர மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு நகர்வு

### நேற்று இரவிரவாக முன்னெச்சரிக்கை நடவடிக்கை

- வடமராட்சி, கரவெட்டிச் செய்தியாளர்கள் -

கரவெட்டி,மார்ச்29

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு உட்பட வடக்குக் கரையோரப் பகுதிகளில் இருந்து மக்கள் நேற்று இரவு பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்திருக்கின்றனர்.

சுமாத்திரா பூகம்பம் பற்றிய தகவல் வெளியாகியதை அடுத்து வடமராட்சியில் பருத்தித்துறை முனை தொடக்கம் தொண்டைமானாறு வரையான கரையோரப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன.

விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறையினரும் அங்குள்ள கடற்றொழிலாளர் சங்கத்தினரும் உறக்கத்தில் இருந்த மக்களை எழுப்பி பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தும் முன்னேற்பாட்டு நடவடிக்கையை நேற்று நள்ளிரவில் ஆரம்பித்தனர்.

ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட மக்களை எச்சரிக்கை செய்து வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

வடமராட்சி கரையோரத்தில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட தளங்களில் இருந்து இராணுவத்தினரும் [illegible]ங்கள் பொருள்களோடு வெளியேறினர்.

நேற்று நள்ளிரவு முதல் வெளியேறிய மக்கள் பாடசாலைகளிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சம் அடைந்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளும் உஷார்!

கொழும்பு . மார்ச்29

மற்றோர் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பையடுத்து முப்படைகளையும் உஷார் நிலையில் வைத்திருக்கும் பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு விடுத்தார்.

இதுபோன்றரீ உத்தரவு ஒன்றை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் விடுத்தார்.

கொழும்பில் கரையோரப் பகுதிகளில் இருந்து மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

முகத்துவாரம் பகுதியில் இராணுவத்தினர் வாகனத்தில் மக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டனர். பொலீஸார் வாகனங்களைக் கடற்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் இரு போராளிகள் வெட்டிக்கொலை!

கிழக்கில் புலிபாய்ந்த கல் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமுக்கு உணவு கொடுத்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போராளிகள் இருவர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

புதுக்குளம் மத்திய கரவெட்டியைச் சேர்ந்த மேஜர் புகழ் அமுதன் என்று அழைக்கப்படும் கிட்ணப்பிள்ளை சிவநேசன் மற்றும் முனிகோவிலடி கோப்பாய் தெற்கைச் சேர்ந்த லெப்டினன்ட் இறைமாறன் என்று அழைக்கப்படும் அருள்ராசா சஞ்சயன் ஆகிய போராளிகளே கொலை செய்யப்பட்டனர் - என்று விடுதலை புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் புலிபாய்ந்த கல் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமுக்கு உணவு கொடுத்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கொலை அலைகள் தாக்கும் அபாயக் கட்டம் கழிந்தது

கொழும்பு . மார்ச்29

சுமத்திரா தீவுப் பகுதியில் நேற்றிரவு கடலில் ஏற்பட்ட பூகம்பத்தினால் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுவதற்குச் சாத்தியமான காலப்பகுதி இன்று அதிகாலை 3 மணியுடன் கடந்துவிட்டதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

நேற்றிரவு 10.10 மணிக்கு ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து, சுமார் 3 மணிநேரத்தின் பின்னர் - இன்று அதிகாலை 1.10 மணியளவில் - ஆழிப்பேரலைகள் இலங்கைக் கரையோரங்களைத் தாக்கலாம் என்று நிபுணர்கள் அறிவித்திருந்தனர். ஆனால், அந்தக் காலப் பகுதிக்குள் இலங்கை, இந்தியக் கரைகளில் கடலில் எந்த மாறுதல்களும் அவதானிக்கப்படவில்லை.

சில இடங்களில் சிறுசிறு கொந்தளிப்புகள் தென்பட்டபோதும், பெரிய அளவில் கொலை அலைகள் எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை. எனினும், நேற்று நள்ளிரவுக்குப் பிறகும் எந்த ஒருநாட்டின் பகுதியையும் ஆழிப்பேரலைகள் தாக்கின என்ற செய்திகள் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எந்த நிலைமையையும் எதிர்கொள்வதற்கு முப்படையினரும் பொலீஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

தெற்கில் தலைநகரக் கரையோரப் பிரதேசங்களில் பொலீஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுகின்றன என்றும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் நடந்தது...

அம்பாறையில் சுனாமி அச்சம் காரணமாக மக்கள் பாதுகாப்பு இடங்களை நாடிச் சென்றனர். அப்போது வாகன விபத்து ஒன்று இடம்பெற்றது. இதில் ஒருவர் படுகாயமுற்றார். அந்தவேளை, அவ்வழியே வந்த படைத் தரப்பு அம்புலன்ஸ் வாகனம் காயப்பட்டவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல மறுத்து தன்வழியே சென்றதாகத் தனியார் வானொலி ஒன்று தெரிவித்தது.

(ஓ-8-7-190)

✪ ✪ ✪

வடமராட்சிப் பகுதியில் கரையோர மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி பாதுகாப்பான இடம்தேடி ஓடினார்கள். அவர்கள் பாடசாலைகள், வழிபாட்டிடங்கள் என்பவற்றில் தஞ்சம் புகுந்தனர். அப்போது பாடசாலை அதிபர் ஒருவர் பாடசாலைக்குள் மக்கள் செல்வதைப் தடுத்துள்ளார். காலையில் வெளியேறிவிடுவோம் என்று மக்கள் உறுதிமொழி வழங்கிய பின்னரே அவர்களைப் பாடசாலைக்குள் அதிபர் அனுமதித்தாராம்.

(ஓ-70)

கண்ணகி துணை

புங்குடுதீவு, கண்ணகைபுரம் கண்ணகை என வழங்கும்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

காலம்: 30.03.2005 புதன்கிழமை காலை 9.15 மணி முதல் 10.45 மணிவரை

எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இன்று (29.03.2005) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 7 மணிவரை

30.03.2005 மகாகும்பாபிஷேகத் தினத்தன்று மாலை 7 மணியளவில்

தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர் S.G சாந்தன் - ஸப்தஸ்வரா இணைந்து வழங்கும் "பக்தி கீத இன்னிசைக் கானங்கள்"

அம்பிகை அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அடியார்களுக்கு பூஜை விழா நாள்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படும். - ஆலய பரிபாலன தர்மகர்த்தாசபை.

(43606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்.மடத்தடியில்**

# டிரக் மோதி இருவர் பலியான வழக்கில் சிப்பாய்க்கு ஒரு வருடத்துக்குச் சிறை!

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.பிரதான வீதி மடத்தடியில் கடந்த 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி இராணுவ டிரக் மோதி இருவர் பலியானமை தொடர்பான வழக்கில் எதிரியான சிப்பாய்க்கு யாழ்.நீதிமன்றம் நேற்றுத் தண்டனை வழங்கியது.

பிரஸ்தாப டிரக்கின் சாரதியான லியனறாலலாகே காமினி திஸநாயக்க மீது கவலையீனமாக வாகனத்தைச் செலுத்தி இருவரின் மரணத்துக்குக் காரணமாக இருந்தது, கவலையீனமாக வாகனத்தைச் செலுத்தியது, விபத்தைத் தடுக்கத்தவறியது, 'பிறேக்' இல்லாத வாகனத்தை ஓட்டியது ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பை யாழ்.நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று வழங்கினார்.

முதலாவது குற்றச்சாட்டு, சாட்சிகளின்படி நிரூபிக்கப்பட்டுள்ளதால், ஒருவருட சிறைத் தண்டனை ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதாக வழங்கப்பட்டது.

2 ஆம், 3 ஆம் குற்றச்சாட்டுக்கள் சார்பில் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

4 ஆவது குற்றச்சாட்டில் இருந்து சிப்பாய் விடுவிக்கப்பட்டார். பிரஸ்தாப வாகனத்தில் போதியளவு 'பிறேக்' இருந்ததாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி அறிக்கை சமர்ப்பித்ததால் அவர் அக்குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்படுவதாக நீதிவான் தெரிவித்தார்.

விபத்துச் சம்பவத்தில் எதிரி தண்டிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவர் சிவில் வழக்குத் தாக்கல் செய்து நஷ்டஈடு பெறமுடியும் எனவும் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ-3)

# வயோதிப மாது மீதான வல்லுறவு முயற்சி: சிப்பாய்க்குப் பிணை வழங்க நீதிவான் மறுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்29

நீர்வேலியில் கடந்த 10ஆம்திகதி வயோதிபப்பெண் ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள சிப்பாய் பிணையில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம் பிரஸ்தாப சிப்பாயின் மனைவியும் தாயும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜரான இராணுவ சட்ட ஆலோசகர் தாரக சங்காது சிப்பாயின் மனைவி, தாய் சார்பில் பிணை வழங்குமாறு நீதிவானிடம கோரினார்.

பிரஸ்தாப சிப்பாய் சார்பில் இராணுவ ஆலோசகர் ஆஜராகி பிணை கோர முடியாது என்றும்-

வழக்கின் புலனாய்வு இன்னமும் பூர்த்தியாகவில்லை என்றும் - தெரிவித்து பிணை மனுவை நீதிவான் நிராகரித்தார். (எ-3)

**யாழ்.நகரப் பகுதியில்**

# சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற மாணவர்கள் நீதிமன்றில் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.நகரப் பகுதியில் சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற 12 மாணவர்கள் நீதிமன்றம் கலையும் வரை தடுத்து வைக்கப்பட்டனர்.

நகரப் பகுதியில் நேற்று சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்ற 12 மாணவர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாணவர்களைக் கடுமையாக எச்சரித்த நீதிவான், அரச செலவாக 500 ரூபா வழங்கும்படி உத்தரவிட்டு, நீதிமன்றம் கலையும் வரை நீதிமன்றத்தில் தடுத்து வைக்கும்படி பணித்தார்.

நீதிமன்றத்தில் உள்ள சிறைக்கூடத்தில் வைக்கப்பட்ட 12 மாணவர்களும் மாலையில் நீதிமன்றம் கலைந்த பின்னர் விடுவிக்கப்பட்டனர். (எ-3)

# யாழ்.பரமேஸ்வராச் சந்திச் சூட்டுச் சம்பவம்: படையினரின் துப்பாக்கிகள் பகுப்பாய்வுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.நகரப் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி பாடசாலை மாணவி இராணுவ டிராக்டர் மோதி மரணமான சம்பவத்தை அடுத்து திருநெல்வேலியில் வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் மற்றும் ஆறு படையினரின் சுடுகலன்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த யாழ். நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

அச்சமயம் நீதிமன்றில் ஆஜரான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கருணநாயக்க சாட்சியம் அளித்தார்.

"இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை. அத்துடன், சம்பவம் நடந்ததை நேரில் கண்ட சாட்சிகள் இல்லை.

"எனவே, விசாரணைக்கு உதவுவதற்காக ஒரு பொலீஸாரினதும் 7 இராணுவத்தினதும் ஆயுதங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

"எனவே, ஏழு ரி-56 துப்பாக்கிகள், இறந்தவரின் தலையில் இருந்து மீட்கப்பட்டுள்ள ரவை, அங்கு காணப்பட்ட ஒரு வெற்றுரவை, பிரஸ்தாப துப்பாக்கிகளில் பொருத்தப்பட்ட மகஸின்கள், இறந்தவரின் மாதிரி இரத்தம், அவர் உயிரிழந்து கிடந்த இடத்தில் சேகரிக் கப்பட்ட மாதிரி இரத்தம் ஆகியவற்றைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்" - என்று சாட்சியத்தில் அவர் தெரிவித்தார்.

மேற்படி சாட்சியத்தை அடுத்து, ஆயுதங்களையும் மற்றைய பொருள்களையும் இரசாயனப்பகுப்பாய்வுக்கு அனுப்ப அனுமதி வழங்கிய நீதிவான், இரு வாரங்களுக்குள் பகுப்பாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான புலனாய்வை விரைவில் முடித்து, சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-3)








பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற கண்டனப் பேரணியின் போது தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன் ஆகியோர் பேரணியின் முன்பாகத் தலைமை வகித்துச் செலவதை முதல் படத்தில் காணலாம்.

பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமாரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்படுவதையும் -

தம்பசிட்டியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியிடம் கண்காணிப்புக் குழுவினருக்கான மகஜர் கையளிக்கப்படுவதையும் - அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்:சி.சுந்தரலிங்கம்)*

# அரசுக்கு எதிராக வடமராட்சியில் பேரணி!

வடமராட்சியில் நேற்று ஆயிரக்கணக்கில் ஒன்று திரண்ட மக்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தினர். இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வர்த்தக நிறுவனங்கள், சந்தைகள் யாவும் மூடப்பட்டு நகரங்கள் வெறிச் சோடிக் காணப்பட்டன. பொலீஸார், படையினரின் நடவடிக்கைகளும் முடக்கப்பட்டன.

அரசின் 100 மீற்றர் கரையோரத் தடைவலயச் சட்டத்தை நீக்கக்கோரியும், கடல் தொழிலுக்கு மீண்டும் பாஸ் முறையை அமுல்படுத்த முயலும் படைத்தரப்பின் நடவடிக்கைகளைக் கண்டித்தும், உயர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இன்னும் பல முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியும் வடமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் ஆகியன இணைந்து இந்தக் கண் டனப் பேரணியை நடத்தின.

முற்பகல் 11 மணியளவில் பருத்தித்துறை சிவன்கோயிலில் இருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி பருத்தித்துறை [illegible] ஊடாகப் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து, அங்கிருந்து ஓராம் கட்டைச் சந்தி ஊடாகத் தம்பசிட்டியை வந்தடைந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள், பெண்கள், ஆண்கள் என இரண்டாயிரம் பேருக்கு மேற்பட்டோர் பேரணியில் கலந்துகொண்டனர்.

'இலங்கை அரசின் கொடுமைகளைக் கண்டித்து மாபெரும் மக்கள் பேரணி' என்ற வாசகங்கள் தமிழிலும் சிங்களத்திலும் பொறிக்கப்பட்ட பதாகைகள் பேரணியின் முன்பாக எடுத்து வரப்பட்டன. அதன் பின்னால் அணிதிரண்டு வந்தோர் தமிழிலும், சிங்களத்திலும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு கோஷங்கள் எழுப்பியபடி வந்தனர்.

பேரணியின் ஆரம்பித்திலிருந்து முடிவு வரை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கே.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேரணி பருத்தித்துறை பிரதேச செயலகத்தை வந்தடைந்ததும், கடற்றொழிலாளர் சங்கங்களின் செயலாளர் கே.சூரியகுமாரன், பருத்தித்துறை பிரதேச செயலர் கே.வசந்தகுமாரிடம் ஜனாதிபதிக்கான மகஜரைக் கையளித்தார். பேரணி தம்பசிட்டியை அடைந்தபோது அங்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட பிரதித் தலைவர் வொயிட்டோ லெயினோனிடம் (Voitto leinonen) நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மகஜர்களைக் கையளித்தார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கண்காணிப்புக்குழு பிரதித் தலைவருக்கு நிலைமையை ஆங்கிலத்தில் விளக்கினார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பிரதித் தலைவர் வொயிட்டோ லெயினோனன் மக்கள் மத்தியில் பேசுகையில், "உங்களுக்கு உள்ள பிரச்சினைகள் பற்றி எமக்கு நன்கு தெரியும். மகஜரை மேலிடத்துக்கு அனுப்பி வைப்பேன். கடந்த மூன்றாண்டுகளாக பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இவை இலகுவில் தீர்க்கக்கூடியதல்ல. பிரச்சினைகள் தீர நீண்ட நாள்கள் பிடிக்கும். என்றாலும் எதிர் காலத்தில் நல்லதோர் சூழ்நிலை அமையும் என்ற நம்பிக்கையுண்டு. அதனையே எதிர்பார்க்கின்றேன்" - என்றார்.

இதனைத் தொடர்ந்து தம்பசிட்டியில் அ.ம. செபஸ்ரியன் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் சூரியகுமாரன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கண்டனப் பேரணியையொட்டி வடமராட்சிப் பிரதேசத்தில் காலைமுதல் நண்பகல் வரை கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. (எ-க-3-70-15-173)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இந்தியாவுடன் ஒப்பந்தம்: இலங்கையின் பகற்கனவு

'இலங்கையோடு பாதுகாப்பு ஒப்பந்தமா? அப்படி ஒன்று இப்போதைக்கு இல்லவே இல்லை.' - இவ்வாறு இந்திய அரசுத் தலைமை தெளிவாகத் தெரிவித்துவிட்டது எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கையோடு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வைத்து, இலங்கையின் வலையில் இந்தியாவை விழவைப்பதற்கு இலங்கையின் தற்போதைய அரசுத் தலைமை சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு வழிகளையும் கையாண்டு முனைப்பாக நிற்கின்றது.

இராஜதந்திர ரீதியில் கெஞ்சிப் பணிந்து, விஞ்சி முரண்டு, அஞ்சி மிரட்டி பலவகையிலும் இந்தியத் தலைமையை இணங்கவைக்க இலங்கைத் தரப்பில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்தியத் தரப்பின் பரம வைரியான பாகிஸ்தானுடன் கைகோப்போம், அமெரிக்காவுடன் இணைந்து நிற்போம் என்றெல்லாம் இராஜதந்திர மிரட்டல்களை இந்தியாவுக்கு விட்டுப் பார்க்கிறது இலங்கைத்தரப்பு. ஆனால், இந்தியத் தலைமையோ - புதுடில்லி ஆட்சியோ - மசிந்து கொடுப்பதாக இல்லை.

இந்தியத் தரப்பைப் பொறுத்தவரை அது, இலங்கையின் இந்தச் சூழ்ச்சி வலையில் விழாமல் இருப்பதில் அதிக முன்னெச்சரிக்கையாக உள்ளது. அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவது - இது விடயத்தில் இந்தியா சூடுகண்ட பூனை. அதனால், மீண்டும் அடுப்பங்கரை என்ற ஒப்பந்தத்தை நாடும் எண்ணம் அதற்கு அறவே இல்லை.

1987இல் இலங்கை மீது தனது மேலாதிக்கமும், வல்லாதிக்கமும் பிரயோகிக்கப்பட்ட சமயத்தில் தனது வலிமையான நிலையை ஸ்திரப்படுத்தும் விதத்தில் எட்டப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டையே அடுத்த இரண்டு வருடங்களில் தூக்கிவீசி, சர்வதேச உலகின் முன்னர் தனது கௌரவத்தையும், சுயாதிபத்தியத்தையும் சந்தி சிரிக்க வைத்த அனுபவப் பாடத்தை இலங்கையிடம் படித்துக் கொண்டிருக்கிறது இந்தியா.

ஆகவே, மீண்டும் அத்தகையதோர் உடன்பாட்டுக்கு - அதுவும் இலங்கை அரசுத் தரப்பின் தலைமையை நம்பிப் போவதற்கு - இந்தியா தயாரில்லை.

இரண்டாவது - முன்னைய ஒப்பந்தம் 1987 ஜூலையில் கையெழுத்தானபோது அதைக் கடுமையாக - அப்போதே - எதிர்த்தவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும். அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து தென்னிலங்கையில் பெரும் ஆர்ப்பாட்டங்கள், குழப்பங்கள், கலவரங்கள் நடத்திக் காட்டியவை இக்கட்சிகள். அவை இரண்டுமே இப்போது கூட்டுச் சேர்ந்து தென்னிலங்கையில் அரசு அமைத்திருக்கின்றன. இப்போது ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இக் கூட்டரசு தவிக்கிறது; தடுமாறுகின்றது. அந்த உரிமைப் போரர்ட்டத்தையும் அந்தப் போராட்ட சக்தியான புலிகளையும் அடக்குவதற்குத் தனது அரசுக்குத் துணையாக இந்தியாவைப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரில் வலுச்சேர்க்க அழைப்பதே இந்தக் கட்சிகளைக் கொண்ட கூட்டரசின் நோக்கம் என்பதும், இப்பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியாவுக்கு சிறிய நாடான இலங்கை அடங்கி - இணங்கி - போவதை நோக்கமாகக் கொண்டதல்ல, இலங்கையின் உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் இலக்கு என்பதும் கூட இந்தியாவுக்கு நன்கு தெரியும்.

மூன்றாவது - இந்தியாவில், மத்தியில், பல கட்சிகளின் கூட்டமைப்பே ஆட்சிபுரிக்கின்றது. இவற்றுள் தமிழகத்தைச் சேர்ந்த கட்சிகளின் ஆதிக்கமும், வலுவும் குறிப்பிடத்தக்கவை. இலங்கை, இந்தியாவுடன் செய்துகொள்ள வற்புறுத்தும் உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு வேட்டு வைப்பதையே இலக்காகக்கொண்டுள்ளது என்பதை உணர்ந்துகொண்டுள்ள - புதுடில்லி அரசில் கூட்டமைத்து இடம்பெற்றுள்ள - தமிழகக் கட்சிகள், இலங்கை அரசின் இந்தச் சூழ்ச்சி வலையில் இந்திய அரசு விழுந்துவிடாமல் முனைப்பாக நின்று தடுத்து வருகின்றன.

அவற்றைப் புறம்தள்ளி, ஒதுக்கிவிட்டு, உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் திராணி புதுடில்லி கூட்டமைப்பு அரசின் தலைமைத்துவத்துக்கு இல்லை. அப்படி அவற்றைப் புறந்தள்ளினால் தமது அரசே கவிழ்ந்து விடும் என்ற யதார்த்தம் அத் தலைமைக்கு நன்கு தெரியும்.

இலங்கையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. அரசின் இயலாத் தன்மையிலிருந்து அவற்றைக் காப்பாற்றி உதவுவதற்காகத் தனது இந்தியக் கூட்டமைப்பு அரசை உடைத்துக் கொள்ள இந்தியத் தலைவர்கள் தயாரில்லை.

முன்னைய ஒப்பந்தத்தின் காரணமாக இலங்கையில் தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை - அவமானத்தோடு இலங்கையை விட்டு நடையைக் கட்டிய பட்டறிவை - இந்தியா மறக்கத்தயாரில்லை.

இந்தி[illegible] புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது எ[illegible]பது உ[illegible]தான். புலிகளோடு இந்தியா தொடர்பு எதையும் வைக்கவில்[illegible] என்பதும் சரிதான், இதைத்தவிர, புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இப்போது குழப்பமோ, மோதலோ, தேவையற்ற உரசுப்பாடுகளோ இல்லை. இந்தியத் தரப்போடு முட்டாமல், மோதாமல், பிய்ச்சல் - பிடுங்கல் இல்லாமல் தம்பாட்டில் செயற்பட்டு வருகின்றனர் புலிகள்.

இலங்கையோடு ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து, இந்த விடயத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி, தனது தெற்கு எல்லைக் கொல்லையில் நிரந்தர எதிரிகளை உருவாக்கிக் கொள்ள - வீணாக ஒரு பிரச்சினையை ஏற்படுத் திக்கொள்ள - புலிகளைத் தேடிப்பிடித்து எதிரிகளாகவும் பகைவர்களாகவும் மாற்றிக்கொள்ள - இந்தியத் தலைமை விரும்பாது என்பதும் திண்ணம்.

தனக்கு பிரதியுபகாரமாக ஒரு பலனையும் தராத - மறுபுறத்தில் பிரச்சினைகளையே தரக்கூடிய - ஓர் ஒப்பந்தத்தைச் செய்து தனக்குத்தானே தொல்லையை ஏற்படுத்திக் கொள்ள இந்தியா விரும்பாது என்ற யதார்த்தத்தை இலங்கை அரசுத் தலைமை புரிந்துகொள்வது நல்லது.

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற நப்பாசையில் இலங்கை அரசுத் தலைமை காத்திருப்பது 'இலவு காத்த கிளியின் கதைபோலவே' ஆகும் என்பதும் நிச்சயம்.

# யாழ்.ஆஸ்பத்திரி 'கிளினிக்' நோயாளர் மருந்து பெறும் நடைமுறையில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய கிசிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் 'கிளினிக்' கில் இடைக்கால மருந்து பெற்றுக்கொள்ளும் முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இம்மாற்றத்திற்கமைய நோயாளர்கள் ஒவ்வொரு 'கிளினிக்' கிற்கும் சமுகமளித்து வைத்தியரின் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டே மருந்து வழங்கப்படும். இந்த நடைமுறைக்கமைய நோயாளிக்கு சுமார் ஒரு மாதத்திற்குரிய மருந்துகள் வழங்கப்பட்டு, மாதமொருமுறை பரிசோதனைக்கான நாள் கொடுக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் 15 நாள்களுக்கு ஒரு தடவை மருந்து வழங்கப்பட்டு வந்தது. ஒரு தடவை நோயாளி நேரில் சென்று மருந்துபெற வேண்டும். 15 நாள்களின் பின்னர் நோயாளி செல்லாமலே வேறொருவர் மூலம் மருந்து பெறமுடியும். இந்த நடைமுறையே இதுவரை பின்பற்றப்பட்டு வந்தது.

மருந்துக் கையிருப்பு குறைவாக உள்ள காலங்களில் நோயாளருக்கு மருந்துகளைப் பங்கிட்டுக் கொடுக்க இந்த நடைமுறை வசதியாக இருந்துவந்தது.

தற்போது மருந்துகளின் கையிருப்பு போதுமான அளவு இருப்பதினாலும், நோயாளர்களுக்கு முன்பு இருந்த சிரமங்களைக் குறைக்கும் வகையிலும் மாதமொரு முறை சிகிச்சை என்ற மாற்று நடவடிக்கை வைத்திய சிகிச்சைப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

# மக்களுக்கு இடையூறு செய்வோர் உடனே திருந்த வேண்டுகோள்

## வடமராட்சி அரசியற்றுறை விடுத்தது

கரவெட்டி, மார்ச் 29

இரவு வேளை வீதிகளில் நின்று அட்டகாசம் புரிபவர்களும் கலாசாரச் சீரழிவுச் செயல்களில் ஈடுபடுவோரும் இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பிரதேச அரசியற்றுறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமாரட்சியின் முக்கிய இடங்களில் உள்ள வீதிகளில் இரவுவேளை கூடுபவர்கள் பூட்டிய கடைகளுக்கு முன்பாகவும் மறைவிடங்களிலும் அமர்ந்து மது பானம் அருந்துகின்றனர். அவர்களில் பலர் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்களின் இத்தகைய நடவடிக்கைகளால் பொதுமக்கள் சங்கடங்களை எதிர்கொள்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையிலேயே அரசியற்றுறையினர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

வீதிகளிலும் பொதுஇடங்களிலும் கூடிநின்று கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும்-

மீறிச்செயற்படுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வழிசெய்யப்படும் என்றும் -

அரசியற்றுறையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-70)

## நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு பதில் மருத்துவர் அவசியம்

நல்லூர்,மார்ச்29

நெடுந்தீவு வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் விடுமுறையில் செல்லும்போது பதில் கடமையாற்ற மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று நெடுந்தீவு மக்கள் கோருகின்றனர்.

தற்போது பணியில் உள்ள மருத்துவர் விடுமுறையில் செல்லும் சமயங்களில் அவர் மீண்டும் பணிக்குத் திரும்பும்வரை தாம் மருத்துவ வசதிபெற சிரமப்படுகிறோம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ-111)

## போட்டிப் பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம், மார்ச் 29

நாடளாவிய ரீதியில் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு 11 தரம் 11 இற்கான பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் மட்டும் இடம்பெறவுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் 320 பேர் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பரீட்சைக்கு தகுதியானவர்களுக்கான அனுமதியட்டைகள் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்குத் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் நுண்ணறிவு, கிரகித்தல், விடய ஆய்வு போன்றவற்றில் பரீட்சிக்கப்படவுள்ளனர். (ஒ- 185)

## தாய், சேய் நிலைய திறப்புவிழா

கிளிநொச்சி,மார்ச்29

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நோர்வேக் கிளையின் நிதியுதவியுடன் 8 ஆம் கட்டை, அக்கராயனில் அமைக்கப்பட்ட அன்பு தாய், சேய் போசாக்கு நிலையப் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-305-202)

# ஆலயத்தில் குழப்பம் விளைவித்த கும்பலுக்கு கடும் எச்சரிக்கை

வலி.வடக்கு,மார்ச்29

ஆலயத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின்போது மதுபோதையில் கலகம் விளைவித்த கும்பலை கலாசாரம் பேணும் இளைஞர்கள் பிடித்துச் சென்று கடுமையாக எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

சுன்னாகம் ஐயனார் கோவிலில் சமீபத்தில் ஒருநாள் இரவு இசைக்கச்சேரி இடம்பெற்றது. அப்போது மதுபோதையில் நின்ற இளைஞர்கள் பலர் இசைக்கு ஏற்றவாறு நடனம் ஆடினார்கள். அவர்களில் இருவர் சிங்கள மொழியில் கத்திக் கூச்சலிட்டு பிறருக்கு இடையூறு விளைவித்தனர். அத்துடன், இந்தக் குழுவினருக்கு நடனமாடிய மற்றொரு குழுவினருடன் பிணக்கு ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது. இந்த மோதலால் ஆலயச் சுற்றாடலில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கலாசாரத்தைப் பேணும் குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்கள் மோதலில் ஈடுபட்டவர்களை சுற்றிவளைத்துப் பிடித்தனர். பிடிபட்டவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு பின்னர் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-86)

# சாம்பலோடை மயானத்தை புனரமைக்கக் கோரிக்கை

வலி.வடக்கு, மார்ச் 29

காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காகச் செல்லும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

இந்த மயானத்திற்குச் சடலங்களை எடுத்துச் செல்பவர்கள் பாதையின் இருமருங்கிலும் வளர்ந்து காணப்படுகின்ற பற்றைகள், புதர்களை வெட்டிப்பாதை அமைத்தே செல்லும் அவல நிலையே காணப்படுகின்றன.

மயானத்திற்குச் செல்வதற்கென ஏற்கனவே அமைக்கப்பட்ட பாதை அழிந்து போயுள்ளதுடன் மயானத்தில் கட்டப்பட்ட மடமும் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் அழிந்த நிலையில் காணப்படுகின்றது.

ஒரு மனிதன் இறந்தால் அவனது இறுதிக்கிரியைகள் இடம்பெறும் இடமான மயானத்[illegible] அபிவிருத்தி செய்ய எவரும் முன்வரவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அதே வேளை காரை நகர் உதவி அரச அதிபர் பணிமனை மயானத்தைப் புனரமைத்துத் தர வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ- 86)

# வீதிப் பெயர்ப்பலகைகள் விஷமிகள் சிலரால் சேதம்

நவாலி,மார்ச்29

நவாலிப் பிரதேசத்தில் வீதிப் பெயர்ப் பலகைகளை விஷமிகள் சிலர் சேதப் படுத்தி வருகின்றனர்.

சின்னப்பா வீதி, முருகமூர்த்தி வீதி ஆகியவற்றின் பெயர்ப்பலகைகள் கடந்த வாரம் சேதப்படுத்தப்பட்டன.

இதேபோன்று அண்மையில் மானிப்பாய் பிரதேச சபையினால் நடப்பட்ட கலையரசு வீதியின் பெயர்ப்பலகையும் விஷமிகளால் சேதமாக்கப்பட்டது.

இதேவேளை, வர்த்தக நிலையங்களில் தொங்கவிடப்பட்டிருந்த பெயர்ப்பலகைகளும் விஷமிகளால் அகற்றப்படுகின்றன. ஆகவே, இத்தகைய செயல்களைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரி வருகின்றனர். (ஒ-100)

### நாளை

பங்குனி 17
புதன்கிழமை
30.03.2005
திதி : பஞ்சமி
முன்னிரவு 10.55 வரை.
நட்சத்திரம் : அனுசம்
முன்னிரவு 11.39 வரை.
சுபநேரம் : 04.42 - 06.12
[illegible]
[illegible]

# சமாதான நீதிவான் நியமனத்தில் பழைய முறையைக் கடைப்பிடிக்குக

## பொது அமைப்புகள் கோரிக்கை

வலி.மேற்கு,மார்ச்29

சமாதான நீதிவான்கள் நியமனம் செய்யும் போது பிரதேசச் செயலரின் அறிக்கையினைப் பெற்று அதன் பரிந்துரையின் பேரிலேயே நியமனம் மேற்கொள்ளவேண்டும் என்று பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துவருகின்றன.

கடந்த சில வருடங்களாக நாடளாவிய ரீதியில் இடம்பெறும் சமாதான நீதிவான்கள் நியமனங்கள் அரசியல்வாதிகளின் சிபார்சுக்கிணங்கவே இடம்பெறுவதாகப் பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். இந்நிலையில் இப்பதவிக்கு தகுதியற்றவர்களும் நியமிக்கப்பட்டதால் அதன் கௌரவம் குறைந்து வருவதாகக் கருதப்படுகிறது.

முன்னைய காலங்களில் பொது அமைப்புக்களின் சிபார்சுகளுக்கிணங்க பிரதேச செயலரின் அறிக்கையின் அடிப்படையில் சமாதான நீதிவான்களை நீதி அமைச்சு நியமனம் செய்து வந்தது. இந்த நடைமுறையை மீண்டும் நீதி அமைச்சு கடைப்பிடிக்க வேண்டுமென்று பொது அமைப்புகள் பலவும் வற்புறுத்துகின்றன. (ஒ-175)

### உதயவாக்கு

பணத்தால் செய்யமுடியாததை குணத்தால் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்வர்ணதாத்ரி புங்குடுதீவு, கண்ணகைபுரம்

# அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்



புனராவர்த்தனப் பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

**காலம் பங்குனித் திங்கள் 17 [30.03.2005] புதன் காலை 9.15 முதல் 10.45 மணிவரை**

**சிவதர்ம செல்வர்களே,** சிவபூமியாகிய இலங்கையின் வடபால் சைவ கலாசாரம் பொலிவுறும் யாழ்ப்பாண நகரின் தென்பால் சிவ சீலர்களும், தர்மசிந்தை குறையாத வளமும் உடைய வணிகப் பேரறிஞர்களும்,கல்வியும்,இசைக்கலையும் கைவரப்பெற்ற பேரறிஞர்களும் நிறைந்த ஸ்வர்ணதாத்ரி துவீபம் புங்குடுதீவு கிழக்கில் அருள்விளங்கு கண்ணகைத்தேவி எனப் போற் றப்படும் ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தர்ம சீலர்களும்,அடியார்களும் திருவருளுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அழகுற வர்ண வேலைகள் செய்து மங்கள மிகு தாரண வருடம் பங்குனி மாதம் 17 ஆம் நாள் (30-03-2005) புதன்கிழமை பஞ்சமித்திதியும்,அனுஷ நட்சத்திரமும்,அமிர்த சித்தயோகமும், குரு ஓரையும் அமையும் காலை 09.15 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்த திருவருள் பாலித்துள்ளதால் அந்நேரமும் அதற்கு முன்பின் நடைபெறும் கிரியாகாலங்களிலும் வந்து கலந்து தரிசித்துய்யுமாறு வேண்டுகிறோம்.

**கிரியாகால விவரங்கள்:**

| | | |
|---|---|---|
| பங்குனி 12 [25.03.2005] வெள்ளி மாலை 4.00 மணிமுதல் | - | விநாயக வழிபாடு, அனுக்ஞை, கணபதி ஹோமம், யந்திரபூஜை |
| பங்குனி 13 [26.03.2005] சனி மாலை 5.00 மணிமுதல் | - | கிரகசாந்தி, பிரவேச பலி, திசா ஹோமம் |
| பங்குனி 14 [27.03.2005] ஞாயிறு காலை 9.00 மணிமுதல் | - | நவக்கிரஹஹோமம், யந்திரபூஜை |
| பங்குனி 14 [27.03.2005] ஞாயிறு மாலை 4.00 மணிமுதல் | - | வாஸ்து சாந்தி, கோவாசம் |
| பங்குனி 15 [28.03.2005] திங்கள் காலை 9.30 மணிமுதல் | - | சிற்பி சம்பாவனை, தாபிஸ்தாபனம், சூரியாக்கினி, தீர்த்த, மிருத், சங்கிரகணம் |
| பங்குனி 15 [28.03.2005] திங்கள் மாலை 5.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, தீபஸ்தாபனம், ரஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷனம், யாகபூஜை, ஹோமம், சர்வாஞ்சலி, யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் |
| பங்குனி 16 [29.03.2005] செவ்வாய் காலை 7.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, தைலாப்பியங்கம், யாகபூஜை, விசேட திரவிய ஹோமம், ஸ்ரீ சுத்த ஹோமம், சர்வாஞ்சலி |

**அடியார்கள் காலை 7.00 மணிமுதல் மாலை 8.00மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தலாம்**

| | | |
|---|---|---|
| பங்குனி 16 [29.03.2005] செவ்வாய் மாலை 5.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, யாகபூஜை, ஹோமம், நியாசம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி |
| பங்குனி 17 [30.03.2005] புதன் காலை 5.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, யாகபூஜை, ஹோமம், மகாபூர்ணாகுதி, பலிகள், தானங்கள், கும்பப்பிரதஷணம், கோபுர கும்பாபிஷேகம் [9.15 மணி] பிரிதிகள். மஹா கும்பாபிஷேகம் [10.00 மணி] கண்ணகைத் தேவி, பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகம், தசமங்கள தரிசனம், எகமானபிஷேகம். ஆசீர்வாதம், ஆசியுரை |
| பங்குனி 17 [30.03.2005] புதன் நண்பகல் 11.30 மணிக்கு | - | மஹாபிஷேகம் பூஜை, மாகேஸ்வர பூஜை |
| பங்குனி 17 [30.03.2005] புதன் மாலை 5.00 மணிக்கு | - | விசேட பூஜை, தீபாராதனை, சுவாமி வீதியுலா |

(C-41870)(52-18-11-16)


### விளம்பர அனுசரணை:

**யாழ்ப்பாண வணிக நிலையம்.**
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 222 7480.

**யாழ்ப்பாண இரும்பகம்-ஏசியன் பெயின்ற்ஸ் யாழ்.விநியோக நிலையம்**
32,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 222 7028, 222 5589.

**வூட்லன்ஸ் கொம்பனி**
192, 4 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்பு - 11. T.P:422 426, 327451.

# NET NET NET NET NET




CADDY SHACK கணனிகள்
வடகிழக்கு ஏக விநியோகஸ்தர்களின்!

| | |
|---|---|
| P II 300 Mhz / 64 Mb RAM / 2.5 GB HDD/ | (14,900/-) |
| P II 333 Mhz / 64 Mb RAM / 3.2 GB HDD/ | (15,500/-) |
| P II 350 Mhz / 64 Mb RAM / 4.2 GB HDD/ | (16,900/-) |
| P III 450 Mhz / 64 Mb RAM / 6.4 GB HDD/ | (24,500/-) |
| P III 500 Mhz / 64 Mb RAM / 6.4 GB HDD/ | (25,400/-) |
| P III 550 Mhz / 64 Mb RAM / 6.4 GB HDD/ | (25,900/-) |
| P III 600 Mhz / 64 Mb RAM / 6.5 GB HDD/ | (26,000/-) |

(06 Months Warranty)
(Desktop & Tower Casing)
(WITH 1.44 MB FDD / VOA / CD ROM / SOUND
15" DIGITAL COLOUR MONITOR / KEY BOARD & MOUSE)

முதன்முறையாக யாழ். மண்ணில்
**DIPLOMA IN MOBILE PHONE REPAIRS**
ஏற்கனவே ஆரம்பம்: 15.03.2005
2ஆவது பிரிவு ஆரம்பம்: 09.04.2005
பதிவுகளுக்கு முந்துங்கள்!
ஒரு பிரிவில் ௨0 பேர் மட்டுமே!
ஏனைய தொழிற் பயிற்சிகள்
Telecom Cable Engineering.
யாழ். மண்ணில் முதல் முறையாக!
Computer Hardware Technology
Computer Networking.
விவரங்களுக்கு:
**NORTH EAST TELECOM**
**0777 - 708498 & 021 222 3786**

Lap Top கணனிகள்
P III - 1.133 GHz -
IBM Phink Pad
(Mobile Processor)
256 MB
Ram / 30 GB
Hard Disk with
DVD Rom
கொழும்பு விலையில்
**Rs. 75,000/-**

முதன்முறையாக யாழ். மண்ணில் எம்மிடம் மொபைல் இணைப்புக்களைப் பெற்ற சகல வாடிக்கையாளர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்!
ABANS இன் வடகிழக்கு ஏக விநியோகத்தர்கள், எம்மிடம் ஒரு மொடல் மட்டும் அல்ல!
உலகப் பிரசித்திபெற்ற சகலவிதமான Mobile Phonesகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
01 வருட அபான்ஸ் உத்தரவாதத்துடன்
(With One Year Warranty)
**Unlocking & Software Installed**
Mobile Phonesகளை 20 நிமிடத்தில் Unlocking செய்யலாம்.
Nokia, Motorola, Samsung, Siemens, Ericsson

எம்மிடம் சகலவித புத்தம்புதிய மறுசீரமைக்கப்பட்ட கணனிகளின் விற்பனை, திருத்தவேலைகள் மற்றும் மொபைல்போன் விற்பனை, திருத்தவேலைகள் என்பன செய்துகொடுக்கப்படும்.
இலத்திரனியல் பட்டயப் பொறியியலாளரின் நேரடி வழிநடத்தலின்கீழ் எமது தொழிற்பயிற்சிக் கற்கைநெறிகள், கணனி மற்றும் மொபைல் திருத்தவேலை நிலையமும் (PC & Mobile Repair Centre) இயங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது!

## வடகிழக்கு தொழில்நுட்பம் - NORTH EAST TECHNOLOGIES

**No.34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.**

**T.P.: 021 222 3786 & Hotline: 0777 708498**

(C/41872) (24-16-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப பனை, தென்னை வளத்தைப் பேணுவோம்!

## பளை அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

பரந்தன்,மார்ச்29

எமது பொருளாதாரத்தை வளர்க்க பனை மற்றும் தென்னை வளங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

- இவ்வாறு பளைக் கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் அ.கரிகாலன் தெரிவித்தார்.

பளை, பச்சிலைப்பள்ளி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் அண்மையில் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பளைக் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் உரை நிகழ்த்திய அ.கரிகாலன் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்திலுள்ள பனை, தென்னை வளங்கள் போர் அனர்த்தங்களால் அழிந்து விட்டன. அவற்றை மக்கள் மீளக்கட்டியெழுப்ப வேண்டும். பனையில் இருந்து பெறப்படும் பதனீர் மூலம் வெல்ல உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் எமது பொருளாதாரம் அபிவிருத்தியடையும். வேலைவாய்ப்பும் கிடைக்கும். வெல்ல உற்பத்தியை ஊக்குவிக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் மற்றும் சமகால அரசியல் கருத்துக்கள் குறித்து ஆராயப்பட்டன. (ஒ-352-204)

## கைவேலி வீட்டுத்திட்டத்தில் விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு

கிளிநொச்சி,மார்ச்29

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியினரின் ஏற்பாட்டில் பெண்கள் விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கும் கிராம தரிசிப்பும் கடந்த 24 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் உள்ள கைவேலி 100 வீட்டுத்திட்டத்தில் நடைபெற்றது.

அன்றையதினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வீடு வீடாகச் சென்ற அன்னையர் முன்னணி உறுப்பினர்கள், பெண்கள் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

பின்னர் பிற்பகல் 4 மணிக்கு றாஜ் முன்பள்ளியில் கருத்தரங்கு ஆரம்பமானது.

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணிச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், அரசியல்துறையைச் சேர்ந்த ஈழவன், முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இந்த நிகழ்வில் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்று தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (ஒ-204)

## விளையாட்டுப் போட்டிகள்

முழங்காவில்,மார்ச்29

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டி அண்மையில் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சின்னராசா கலந்துகொண்டார்.

முழங்காவில் மகாவித்தியாலயம், வேரவில் இந்து மகாவித்தியாலயம், நல்லூர் மகாவித்தியாலயம், பூநகரி மகாவித்தியாலயம், நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை, கறுக்காய் தீவு மகாவித்தியாலயம் ஆகிய பாட சாலை மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.

பூநகரிக் கோட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ-323-204)

★ ★ ★

முழங்காவில்,மார்ச்29

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்றது.

உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். வலய மட்டத்தில் முழங்காவில் மகாவித்தியாலயம் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. (ஒ-323-204)




# இராமநாதபுரம் வலயத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

வட்டக்கச்சி,மார்ச்29

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் வீரமுரசு நிகழ்வும் அண்மையில் இராமநாதபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இராமநாதபுரம் வலயத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் திருமதி இ.தங்கேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி தில்லைநாயகி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினைக் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. கலைவாணன் ஏற்றிவைத்தார்.

மாவீரர்களின் பெற்றோர்கள் இராமநாதபுரம் சந்தியிலிருந்து இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்களின் 'பாண்ட்' இசையுடன் அழைத்து வரப்பட்டனர். மாவீரர்களின் திருவுருவப்படத்திற்குச் சுடர்ஏற்றி மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

சிறப்புரைகளைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபர் க.இரத்தினகுமார், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி, வட்டக்கச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச.பொன்னுத்துரை ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் 'இராகவேங்கை இசைக் குழுவினரின்' இசை நிகழ்வும் நடைபெற்றன.

வட்டக்கச்சி அரசியல் துறையினருடன் மாவீரர் செயற்பாட்டுக் குழுவினரும் தேசிய எழுச்சிப் பேரவையினரும் இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இதில் போராளிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-405-204)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

புதுக்குடியிருப்பு,மார்ச்29

வடக்கு - கிழக்கு கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தினால், பெண்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், வடக்கு - கிழக்கு மாகாண இளைஞர் சேவைப் பிரிவின் இணைப்பாளர் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்

பாடசாலை அதிபர், இணைந்த சேவை மன்றப் பணிப்பாளர், கிராமசேவையாளர், பண்டார வன்னியன் அறங்காவலர் சபையினர், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-353-204)

## நெற்செய்கையாளர் கூட்டம்

முழங்காவில்,மார்ச்29

கரியாலை நாகபடுவான் நீர்த்தேக்க குளத்திட்டத்தின்கீழ் பெரும்போக நெற்செய்கையாளர்களுக்கான கூட்டம் கடந்த 11ஆம் திகதி பூநகரி அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பூநகரி உதவி அரச அதிபர் மா.சிறிஸ் கந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரியாலை நாகபடுவான் நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையில் ஏறபடும் சிரமங்கள் குறித்து ஆராயப்பட்டது.

ஒவ்வொரு விவசாயிக்கும் ஓர் ஏக்கர் காணிக்குரிய நீரைப் பயன்பாட்டிற்காக வழங்குவதாக இக்கூடத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கமக்கார அமைப்பினர், பயனாளிகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்தோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-323-204)

## சுனாமி பாதித்தவர்களுக்கு அழககச் சங்கங்கள் உதவி

ஒட்டுசுட்டான்,மார்ச்29

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு யாழ்.மாவட்ட அழகக வர்த்தகர் சங்கங்களின் சமாசம் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளது.

இந்தச் சமாசத்தினால் வழங்கப்பட்ட நிதி பாதிக்கப்பட்டவர்களுக்குப் பெரும் உதவியாக அமைந்தது என ஒட்டுசுட்டான் பிரதேச அழககச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று ஏனைய சங்கங்களின் சமாசங்களும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தம்மாலியன்றளவு உதவ முன்வரவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.(ஒ-341-203)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்த்தொல்லை

ஒட்டுசுட்டான்,மார்ச்29

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாகவும் இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் - கூறப்படுகிறது.

கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களால் பொதுமக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்காவிடின் கட்டாக்காலி நாய்களினால் மக்கள் அபாயங்களை எதிர்கொள்ளநேரிடும் என இந்தப பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (341-203)

# சுனாமி பாதிதத மக்களுக்கு முல்லைத்தீவில் தற்காலிக வீடுகள்

முல்லைத்தீவு,மார்ச்29

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் தமது உடைமைகளையும், அடையாள அட்டை போன்ற ஆவணங்களையும் இழந்துள்ளனர். இவர்கள் கண்டி, மாத்தளை, மடுல்கலை, மடவளை, தெல்தோட்டை, கலஹா, ஹேவாஹேட்ட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட இவர்கள் தமது சொந்த இடங்களில் இருந்து குடிபெயர்ந்து முல்லைத்தீவுப் பகுதியில் குடியேறியவர்கள் ஆவர். ஆழிப் பேரலைத் தாக்குதலுக்குப் பின்பு இவர்கள் அனைவரும் முல்லைத்தீவு கள்ளப்பாடு தமிழ் வித்தியாலயத்திலும், சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்திலும் வற்றாப்பளை நலன்புரி நிலையத்திலும் அகதிகளாக வாழ்ந்துவந்தனர்.

இவர்களுக்கு 'கரிதாஸ்' நிறுவனம் ஒரு வருட காலத்திற்கான தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளது. சிலாவத்தை மூன்றாம் கட்டையில் அமைக்கப்பட்டுள்ள இவ்வீடுகள் வழங்கும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் 'கரிதாஸ்' இலங்கை 'செடெக்' நிறுவனத்தின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி எஸ்.பி.அந்தோனிமுத்து கலந்துகொண்டார். (ஒ-7)



எழுத்தாளர் பரமபுத்திரனின் 'தூயமனதுடன்' என்ற நாடக நூல் வெளியீட்டு விழா அண்மையில் விசுவமடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் க.ச.சிவலிங்கம் நூலை வெளியிட்டு வைப்பதையும் பெண் ஒருவர் அதனைப் பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம். நூலாசிரியர் பரமபுத்திரன் அருகில் காணப்படுகிறார்.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

## லண்டன் வைத்திய நிபுணர் நடத்துகிறார்

வட்டக்கச்சி,மார்ச்29

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தற்போது பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

லண்டனில் இருந்து வருகைதந்துள்ள பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பிலிப் ஹெறி இந்த சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுவருகின்றார்.

30 பேர் வரையான நோயாளர்களுக்குக் கடந்தவாரம் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் - தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் இருந்தும் அதிகமான நோயாளர்கள் வருகை தந்துள்ளனர் எனவும் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரான்ஸில் இருந்து வருகைதந்துள்ள குழந்தை வைத்திய நிபுணர்கள் இருவர் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட்டுச் சிகிச்சையளித்து வருகின்றனர். (ப-405-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு

# நிவாரணம் தவிர வேறு எந்த உதவியும் அரசிடமிருந்து கிடைக்கவில்லை

## பளை கூத்தியவத்தை கி.அ.ச. தலைவர் கவலை

யாழ்ப்பாணம்,மார்ச்29

குடாநாட்டில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சென்றிகளை அமைத்து மக்களுடன் இருக்கும் படையினர், வலி. வடக்கில் அத்தகைய நிலையை ஏற்படுத்தப் பின்னடித்து வருகின்றனர். அதேநேரம் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணம் தவிர்ந்த ஏனைய அரச உதவிகள் கிட்டாத நிலையில் அவதிப்படுகின்றனர்.

இப்படிக் கூறினார் பளை - கூத்தியவதை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். ஆர்.ஞானசுந்தரம்.

சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடந்தபோது அதில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்த போது, அந்த மக்களின் சமூகப்பணிகளுக்காக இயங்கிய கிராம அபிவிருத்திச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் இடம்பெயர்ந்தன.

கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பரவலாகப் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றதால், அந்த அமைப்புக்களும் செயலிழந்தன. அவற்றின் பயனை அந்த மக்கள் அனுபவிக்க முடியாத நிலை காணப்பட்டது.

எமது கழகமும் அந்தவகையிலேயே இயங்கியது. ஆனால், பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் கூடி, அந்தக் கழகத்தை இயக்கி வருகின்றனர். அதன் மூலம் சமூகத்துக்கான பணியையும் முன்னெடுத்து வருகின்றனர்.

பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எமது வளமிக்க பிரதேசத்தைக் கபளீகரம் செய்த அரசு, அந்தப் பிரதேச மக்களுக்கு நிவாரணத்தைத் தவிர, வேறு எந்தவித உதவியையும் வழங்கவில்லை.

குடாநாட்டில் படையினர், மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் இருப்பது போல, வலி. வடக்கிலும் மக்களை மீளக்குடியமர அனு




மதித்து விட்டு அங்கு இருக்கமுடியாதா? இன்னல்களைத் தொடர்ந்து அனுபவித்து வரும் மக்களின் எதிர்காலம் இருண்டதாகவே இருக்கின்றது. எதிர்காலம் தெரியாது ஏங்கி ஏங்கித் தினமும் அந்த மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் சாத்வீகப் போராட்டங்களைக் கூட மதிக்காது அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வளம்மிக்க மண்ணில் தமது தொழில்களை ஆரம்பிக்கவும் பாரிய தொழிற்சாலைகளை இயக்கி வேலைவாய்ப்பைப் பெறவும் அரசு உடன் செயற்படவேண்டிய காலம் நெருங்கி விட்டது - என்றார் அவர்.

சங்கத்தின் செயலாளர் வி.சந்திரபாலன் எதிர்காலத்தில் மக்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து உரையாற்றினார்.

இறுதியில் புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவராக எஸ்.ஆர்.ஞானசுந்தரம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக வி.சந்திரபாலனும் பொருளாளராக வி.தவராசாவும் தெரிவாகினர்.

(ப-3)

# இலக்கிய வடிவங்களில் உள்ளத்தைத் தைக்கக்கூடியதுதான் கவிதை!

குருநகர்,மார்ச்29

ஏனைய இலக்கிய வடிவங்களைவிட உளளததைத் தைக்கக்கூடியது கவிதையாகும் மக்கள் துன்பங்களையும் தவிப்புக்களையும சமகாலப் பதிவுகளுடன் மக்களுக்கு வழங்குபவனே கவிஞனாவான்.

கவிஞர் மு.புஸ்பராஜனின் 'மீண்டும் வரும நாட்கள்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் மதிப்பீட்டுரை வழங்கிய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுககரசு மேற்கூறியவாறு தெரிவித்தார்.

கவிஞர் மு.புஸ்பராஜனின் 'மீண்டும் வரும் நாட்கள்' கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.ஜோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

கலாநிதி செ.திருநாவுக்கரசு தமது மதிப்பீட்டுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இக்கவிதை நூலில் 62 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. நான்குவரி தொடக்கம் நாற்பதுவரிக் கவிதைகள் வரை உள்ளன. கவிதை என்பது ஏனைய இலக்கிய வடிவங்களைவிட இலகுவாக மனித உள்ளத்தைத் தைக்கக்கூடியது. நம்பிக்கையூட்டும் வடிவமாகவும் இக்கவிதைகள் உள்ளன. 1970 ஆம் ஆண்டில் இருந்து 2002 ஆம் ஆண்டு வரை இவரால் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

சமூக மேன்மையை எடுத்துக்காட்டுபவையாக இக்கவிதைகள் விளங்குகின்றன. நாட்டில் நடைபெற்ற உண்மையான சம்பவங்களைத் தனது கவிதைகளில் கவிஞர் வாழ வைத்துள்ளார். அனுபவத்தில் இருந்து பிறப்பதுதான் இலக்கியம். இந்நூலில் இருபதுக்கு மேற்பட்ட கவிதைகள் எமது நாட்டில் இராணுவம் புரிந்த அட்டூழியங்களை எடுத்துக்காட்டுகின்றன. கிடைக்ககசுடிய வளத்தைப் பயன்படுத்தி இவர் இக்கவிதைகளைப் புனைந்துள்ளார் - என்றார்.

கவிஞர் சோ.பத்மநாதன் தமது மதிப்பீட்டுரையில்:-

கவிஞன் அசாதாரண விடயங்களுக்குள் முடிச்சுப் போடுபவன். போரினால் எமது நாடு பட்டதுன்பங்களையும் எமது மக்கள் பட்ட வேதனைகளையும் அவர் தமது நூலில் வடித்துள்ளார். ஒருவனுக்குத் தான் பிறந்த மண்ணும வாழ்ந்த ஊரின் நினைவுகளும் கடைசி வரை விட்டுப்போகாது. இதில் கவிஞர் மு.புஸ்பராஜன் ஒரு முன்னீடு.

நெப்போலியன் சொன்னான் 'நான் எங்கு சென்றாலும் என்னுடைய தாய் நாட்டைக் கொண்டு செல்கின்றேன்' என்று. இது தான் இன்று உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும எமது தமிழ் மக்களது நிலைப்பாடாக உள்ளது. புஸ்பராஜன் ஊர்ப்பற்றை தனது இக் கவிதை நூலில் பல இடங்களில் காட்டியுள்ளார்- என்றார்.

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் ம.சாம் பிரதீபன் தமது மதிப்பீட்டு உரையில் கூறியதாவது:-

தான் வாழ்ந்த காலத்தை - குருநகர் மக்களது வாழ்க்கையை - இந்நூலில் அவர் சித்தரித்துள்ளார். பிரதேச வழக்கு அவரது கவிதைகளில் ஒட்டியுள்ளது.

1980 ஆம் ஆண்டில் எமது நாட்டில் ஏற்பட்ட இனப்போரால் இவர் பாதிப்புக்குள்ளாக்கியதை தனது கவிதைகளில் தொட டுள்ளார். 1991 இல் இவர் எமது நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் எழுதிய கவிதைகளில் வெளிநாட்டில் தமிழ் உடன் பிறப்புக்கள் அனுபவித்து வரும் வேதனைகளையும் எமது நாட்டின் ஏக்கங்களையும் இவர் வடித்துள்ளார். நாட்டுப்பற்றோடும், சுதந்திரத்தோடும் ஈழம் நோக்கிய நினைவோடும் இவரது அநேக கவிதைகள் இந்நூலில் உள்ளன - என்றார்.

(ப-51-204)

# எந்தவித அறிவும் சமூகத்துக்கு பயன்பட வேண்டும்

## பேராசிரியர் சண்முகலிங்கன்

நல்லூர்,மார்ச்29

எந்த அறிவும் சமூகத்திற்குப் பயன்படுவதாக இருத்தல் வேண்டும். அவை வெறுமனே அறைகளுக்குள் முடங்கி இருத்தலாகாது.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற்றுறை சமூகவியல் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் யாழ்ப்பாணப் புவியியலாளன் சஞ்சிகை வெளியீட்டுவிழா செல்வி த.பிரதீபா தலைமையில் புவியியல்துறை மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் சண்முகலிங்கன் மேலும் பேசும்போது கூறியதாவது:-

இயற்கை அழகானது, ஒழுங்கானது. இது வெறும் மண்பற்றிய படிப்பு அல்ல. நிறைவான சாதாரண மக்களும் தெரிந்து கொள்ளவேண்டிய பல்வேறு விடயம் இதில் உண்டு. மாணவர்களின் அறிவை விருத்திசெய்ய பிறமொழி நூல்களைத் தமிழில் கொண்டுவர வேண்டும் என்பதுபோல ஒரு தரமான தமிழ் ஆக்கங்களும் பிற மொழிகளில் வழங்கப்பட வேண்டும்.

நிலப்பயன்பாட்டில் உள்ள மாற்றங்களை நுண்ணிய தரவுகளைப் பயனுள்ள வகையில் கொண்டுள்ள இந்தச் சஞ்சிகை, மாணவர்களின் அறிவுப் பசிக்கு உகந்த தீனியாக ஆக்கம் பெற்றுள்ளது. இதுபோன்ற சஞ்சிகைகள் ஊடாகச் சமூக அறிவுகளைப் பெறமுடியும். இது எங்கள வாழ்க்கை முழுவதும் அடங்கும் ஒரு நேர்த்தியான நூலாகும். புவியியற்றுறை ஒரு சிறப்பான சஞ்சிகையை வழங்கியதன் மூலம் சமூகத்திற்கு இன்றியமையாத பங்களிப்பைச் செய்துள்ளது - என்றார்.

செல்வி பிரதீபா தனது தலைமை உரையில் கூறியதாவது:-

எமது பிரதேச புவியியல் சார்ந்த அறிவு விருத்திக்கும் சமூகத்தின் மத்தியில் அது குறித்த விழிப்புணர்வுகளைத் தூண்டும் வகையிலும் தனது கணிசமான பங்கை இந்தச் சஞ்சிகை வழங்கும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது. மாணவர்களின் ஆற்றல் திறமைகளின் வெளிப்பாடுகளை எடுத்துக் காட்டும் ஒன்றாக இது இருந்தாலும், பொதுவாக மக்கள் இதன் மூலம் அடையப்போகும் நன்மைகள் எதிர்காலத்தில் ஏராளமாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை - என்றார்.



யாழ்.பல்கலைக்கழக விவசாயத்துறைப் பீடாதிபதி எஸ்.இராசதுரை பேசும் போது கூறியதாவது:-

கற்றலுக்கான உந்துதல்கள் இன்றைய மாணவர்களிடம் குறைவாகவே காணப்படுகினறன. இந்த நிலை மாறவேண்டும். ஆங்கிலம், கணனித் துறை அறிவுகள் இருந்தால் ஒருவர் உயர்ந்த நிலையை எய்தக்கூடிய வாய்ப்புக்கள இப்போது இருக்கிறது. திட்டமிடல் முக்கியமான ஒன்று.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் இந்தப் பிரதேசத்தின் நலன்களை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது. இதனால், ஏனைய பாகங்களைச் சேர்ந்தவர்களாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவதானிக்கப்படுகிறது.

யாழப்பாணப் புவியியலாளன் சஞ்சிகையில் தரப்பட்டுள்ள தகவல்கள் எமது பிரதேசத்தின் பல்வேறு அம்சங்களையும் எடுத்துக்காட்டும் தரவுகளைக் கொண்டதாக வெளிவந்துள்ளது. சிமெந்துத் தொழிற்சாலையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் உட்படக் கருத்தோட்டமான பல்தரப்பட்ட கட்டுரைகள் இடம்பெற்றிருக்கின்றது. மாணவர்களுக்குத் தங்களது திறமை மீது நம்பிக்கை இருத்தல் வேண்டும். குடாநாட்டை மையமாகக் கொண்டுள்ள இந்த ஆக்கம் பயனுள்ள ஒன்று - என்றார்.

புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், செல்வி பா.பிருந்தா ஆகியோரும் பேசினார்கள்.

நூலின் முதல்பிரதியைப் பேராசிரியர் சண்முகலிங்கனிடம் இருந்து அரசறிவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.ரகுநாதன் பெற்றுக் கொண்டார்.

(ப-111-204)

# நோயற்ற சந்ததியை உருவாக்குவதில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆற்றும் பணி

## டாக்டர் குமாரவேற்பிள்ளை பாராட்டு

தாய் சேய் நலன்களைப் பேணுவதற்கும் நோயற்ற இளஞ்சந்ததியை உருவாக்குவதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பேருதவி புரிகின்றன என வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.



பிரான்பற்று ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா அண்மையில் பிரான்பற்று மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி ந.வசந்தா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் டாக்டர் குமாரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும போது மேலும் கூறியதாவது:-

இந்த நிலையத்தை இங்கு நிர்மாணிப்பதற்கு இரண்டு பரப்புக் காணியை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எமது சுகாதார திணைக்களத்திற்கு நன்கொடையாக வழங்கியமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பொதுநலனை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பொது நிறுவனங்களும் பொதுநல அமைப்புகளும் தங்கள் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குவதன் மூலம் எமக்குக் கிடைக்கும் நிதிகளைச சரிவரப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

தாய் சேய் நலன்களைப் பேணுவதற்கும் நோயற்ற இளஞ்சந்ததியை உருவாக்குவதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பேருதவி செய்கின்றன. இங்கு திறந்துவைக்கப்படும் இந்த நிலையத்தின் சேவைகளை இக்கிராம மககள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன், இந்நிலையத்தின் செயறபாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம தான் இதன் வளர்ச்சிக்கு உதவமுடியும் - என்றார்.

நிலையத்தின் பெயர்ப் பலகையையும் டாக்டர் குமாரவேற்பிள்ளை திரை நீக்கஞ்செய்து வைத்தார். சிவஸ்ரீ க.உலகேஸ்வரக் குருக்கள், அருட்திரு.வி.பத்மதயாளன் அடிகளார் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினார்கள்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி கே.வருணநாதன், பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத தலைவர் வி.சுப்பிரமணியம், பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவரூபன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

(ப-135-204)

# மனிதவலு நன்கு செயற்படும் இடத்தில் அபிவிருத்தியும் மேலோங்கி நிற்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்29

கிராமத்தின் அபிவிருத்தி ஒவ்வொரு மக்களின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. மனிதவலு நன்கு செயற்படும் இடங்களில் அபிவிருத்தி மேலோங்கும். இது நாம் கண்ணூடாகக் காணும் செயற்பாடாகும். இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய சமூகச் சுடர் கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:-

மக்கள் யாவரும் ஒன்றிணைந்து கிராமத்தின் தேவைகளை நிறைவுகாணும் போது திட்டங்கள் பயன் பெறுவது கண்கூடாகும்.

கிராம மட்டத்தில் செயற்படும் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மற்றும் பொது அமைப்புகள் யாவும் விழிப்பாக இருந்து, கிராமத்தின் தேவைகளை நிறைவு செய்ய மனிதாபிமானத்துடன் உழைக்க வேண்டும். சனசமூக நிலையங்களினூடாக இத்தகைய சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு மாணவர்களின் ஆற்றல்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.

இதன் மூலம் சிறந்ததொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம். வெளியிடப்படும் சமூகச் சுடர் கையெழுத்துச் சஞ்சிகை ஆவணப் படுத்தப்பட வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபர் சு.சுந்தரராசக் குருக்கள் வெளியீட்டுரையையும், சி.கதிர்காமநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர்.

கவியரங்கு சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ப-28-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கல்லில் மூன்று குருவிகளை வீழ்த்த முயலும் ஜனாதிபதி...!

தமிழில்: வீயெஸ்ரி

நாட்டில் பேரழிவை ஏற்படுத்திய ஆழிப் பேரலை அனர்த்த அனுபவம்கூட ஜனாதிபதியின் கபட நோக்கத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. ஒரு கல்லெறியில் மூன்று குருவிகளை வீழ்த்தும் நோக்குடனான அரசியல் துரும்பைப் பிரயோகிக்கும் திட்டத்தை ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெறுவதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா தீட்டியிருந்தார். நீதிமன்றத்தின் அனுசரணை பெற்று சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதென்பதே அந்த அரசியல் துரும்பாகும். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாகூட நாடாளுமன்றத்தில் தமக்கிருந்த ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி அவ்வித சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தியிருந்தார். அதன்மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க இவரால் முடிந்தபோதிலும், அதன் மூலம் ஒட்டுமொத்த அரசியல் நடைமுறை பிறழ்வடைந்து நாடு குழப்பத்துக்குள்ளாக நேர்ந்தது.

ஜே.ஆர்.தமது இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்கும் முயற்சியை மேற்கொண்டமைக்கான முக்கிய நோக்கம் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், ஐ.தே. கட்சி தோல்வியுற நேரும் என்ற கருத்தினால் அல்ல; மாறாக ஐ.தேகட்சி அரசுக்கு அப்போது நாடாளுமன்றத்திலிருந்த ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மை குறைவடையக்கூடும் எனக் கருதியதாலேயாகும். முடிவில் நியாயமற்ற - பித்தலாட்ட - விதத்தில் நடத்தப்பெற்ற வாக்கெடுப்பில் அவரால் வெற்றிபெற முடிந்தபோதிலும், அதன் பலனாய் நாடு சந்தித்த சிரமங்களும் அழிவுகளும் கொஞ்சநஞ்சமல்ல.

இன்று ஜனாதிபதி சந்திரிகா அவ்வித பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்த முயல்வதற்கும் முக்கிய தேவையொன்று ஏற்பட்டுள்ளமையே காரணமாகும்.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு ஆகிய முத்தரப்புக்களையும் வாய்மூடி மௌனிகளாக்க வேண்டியுள்ளதுடன், தமது அதிகாரப்பதவி கைவிட்டுப் போவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டியுள்ளதும் இத்தேவைக்கான காரணமாகும். இத்தகைய தமது திட்டத்துக்கு அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளிக்கும் பக்கச்சார்புடைய தமிழ்மக்கள் உட்பட்டச் சிறுபான்மை இனத்தவரின் ஆதரவையும் திரட்டவேண்டிய தேவையும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. இதில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றியமைக்கும் திட்டத்தையும் உள்ளடக்க முயல்வது ஐ.தே.கட்சி மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு ஆகியவற்றை மௌனமாக்கும் நோக்குடன் ஆகும்.

ஜனாதிபதிப் பதவியின் காலவரையறை அரசமைப்பில் சேர்க்கப்பட்டிருக்காவிடில், ஜனாதிபதிப் பதவிகுறித்து மாற்றம் மேற்கொள்ள வேண்டிய தேவை சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்காது. குறிப்பிட்ட நபரொருவர் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாகப் பதவிவகிக்க இயலாதென அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளமையே ஜனாதிபதிப் பதவிகுறித்த அரசமைப்பு விதிகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய தேவையை சந்திரிகாவுக்கு ஏற்படுத்தியுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறை வழக்கிலுள்ள நாடுகளில் ஜனாதிபதிப் பதவிக்காலம் குறித்த கட்டுப்பாடுகளும் அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளன.

உலகின் அதியுயர் அதிகாரங்கள் கொண்ட அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் கொண்டதாக அந்நாட்டு அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அமெரிக்கப் பிரஜையொருவர் ஆகக்கூடியது இரு தடவைகள் மட்டுமே ஜனாதிபதிப் பதவியை வகிக்க இயலும், அதற்கடுத்த அதி உயர் அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி நடைமுறை பிரான்ஸ் நாட்டில் பேணப்படுகின்றது. பதவிக்காலம் ஏழு ஆண்டுகள் எனவும், பிரஞ்சுப் பிரஜையொருவர் ஆகக்கூடிய இரு தடவைகள் மட்டுமே அந்நாட்டு ஜனாதிபதியாகப் பதவிவகிக்க இயலுமெனவும் அரசமைப்பு வலியுறுத்துகிறது. தென் ஆபிரிக்க நாட்டிலும் இதுபோன்ற நடைமுறையே பின்பற்றப்படுகிறதாயினும், ஜனாதிபதிப் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளென அந்நாட்டு அரசமைப்பு வரையறுத்துள்ளது. அதே வகையில் வெனிசியூலா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலும் ஜனாதிபதிப் பதவிக்கான நடைமுறைகள் அரசமைப்பு மூலம் நிர்ணயிக்கப்பட்டிருப்பினும், அவ்விரு நாடுகளில் ஜனாதிபதிப் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் ஜனாதிபதியாகத் தெரிவாவோர், அந்தந்த நாட்டு அரசமைப்பு விதிகள் மட்டும் அரசியல் சம்பிரதாயங்களுக்குட்பட்டே செயற்பட்டாக வேண்டும். இவ்வித அரசியல் சம்பிரதாயம் வேறு சில நாடுகளின் அரசமைப்புக்களிலும் திட்டவட்டமான வரையறைகள் மூலம் பேணப்பட்டுவருகின்றன. ஆனால், இந்நாட்டில் ஜனாதிபதி இரு தடவைகள் அப்பதவியை வகித்துக் கால எல்லை பூர்த்தியாவதுடன், மேலும் ஒரு தடவை அப்பதவிக்குப் போட்டியிடும் அபிலாஷையால் நாட்டின் அரசமைப்பு விதிகளில் மாற்றம் மேற்கொள்ள முயன்று அது சாத்தியப்படாத காரணத்தால் அரசியல் நடைமுறைகளை மீறிச் செயற்பட விளைவதை அரசியல் நாகரிகம்






**நாடு பெரும் பின்னடைவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில், காலாவதியாகப் போகும் தனது அரசியல் வாழ்வை நிலைநிறுத்திக்கொள்ளும் நோக்கில், அந்நோக்கத்துக்குத் தடையாயுள்ள தரப்பினரை அரசியலிலிருந்து ஓரங்கட்டிவிடத் திட்டமிட்டுச் சூது விளையாட்டில் ஜனாதிபதி இறங்கியிருக்கிறார் என்கிறார் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியரும் பிரபல ஊடகவியலாளருமான விக்டர் ஐவன். 'ராவய' பத்திரிகையில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கம் இது.**

மிக்க செயற்பாடாகக் கருத இயலாதுள்ளது. மரணிக்கும் வரை பரம்பரை ரீதியில், வம்ச வழிவழியாகத் தமக்குரிய உரிமையெனக் கொண்டு நாட்டை நிர்வகித்த வாய்ப்புக்கள் முடிக்குரிய ராஜபரம்ரை ஆட்சிமுறையிலேயே நடைமுறைச் செயற்பாடாய் அமைந்திருந்தன. இவை இன்றைய ஜனநாயக ரீதியிலான அரசியல் நடைமுறைகளுக்கு ஏற்புடையனவல்ல.

ஜனாதிபதி சந்திரிகா இத்தனை ஆண்டுகளாய் இரு தடைவைகளாக அப்பதவியை வகித்ததன்மூலம் அப்பதவி மூலமான சகல பயன்களையும், வாய்ப்புக்களையும் அனுபவித்து முடியும் தறுவாயில், தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிர்வாக முறை இந்நாட்டுக்குப் பொருத்தமானதொன்றல்ல எனக் கருத்து வெளியிட்டு வருகிறார். அவ்விதம் முன்னரே கருதியிருந்தால், தமது முதலாவது ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைந்த வேளையில் இவ்வாறான தீர்மானத்தை முன்வைத்து நிறைவேற்றியிருந்திருககலாம். காலத்துக்குக் காலம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வித கருத்தை வெளியிட்டு, பொதுமக்களை ஏமாற்றிய அதேவேளை, நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தித் தமது விருப்பு, வெறுப்புக்களைச் செயற்படுத்திக் கொண்டாரேயொழிய, பேச்சளவில் வெளிப்படுத்திய கருத்தைச் செயலளவில் மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா முயற்சியெதனையும் இதயசுத்தியுடன் மேற்கொண்டிருக்கவில்லை. அதுவுமின்றி, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிமூலம் கிட்டிய கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் நாட்டின் அரசியல் நிர்வாகத்துக்குப் பொருத்தமானதல்ல என அவர் விசுவாசமாக நம்பியிருந்தால், அக்கட்டுப்பாடற்ற அதிகாரம் மூலம் செயற்படுத்திய நடவடிக்கைகளைத் தவிர்த்து விட்டிருக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கிருந்தது.

அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்ட வேளையில் தாம் பதவிக்கு வந்தால் கட்டுப்பாடில்லாத நிறைவேற்று அதிகார முறையை இல்லாமல் செய்யவிருப்பதாகப் பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். தேர்தல் பிரசார மேடைகளில் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டும், பத்திரிகைகள் வாயிலாக விளம்பரப்படுத்தியும் வாக்குவேட்டையாடினார். ஆனால், தேர்தலில் வென்று பதவிக்கு வந்ததும், முன்னைய வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து அந்த நிறைவேற்று அதிகாரத்தினூடாக ஈட்டக்கூடிய அத்தனை தேவைகளையும் ஈட்டிக் கொண்டார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும்வரை ஐ.தே.முன்னணி அரசைத் தாம் கலைத்து விடப்போவதில்லையெனச் சபாநாயகருக்கு எழுத்து மூல வாக்குறுதி வழங்கியிருந்தும், அதனைப் பொருட்டாகக் கொள்ளாது சர்வாதிகாரப் போக்கில் தம் எண்ணப்படி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். ஜே.ஆர்.அமைத்துக் கொடுத்துச் சென்ற அரசமைப்பு விதிகள் மூலமான பரந்த அதிகாரங்களைப் பயன்படுத்தியே ஜனாதிபதி சந்திரிகாவால் இவை யாவற்றையும் நிறை[illegible]

நாட்டில் [illegible] நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமை பொருத்தமற்றதும், நாகரிகமற்றதுமெனக் கருத முடிவது ஜனாதிபதிக்குள்ள கட்டுப்பாடற்ற அதிகூடிய அதிகாரத்தைக் கொண்ட முறைமை என்பதன் காரணமாகவேயல்லாது, உலகத்தின் ஏனைய சில நாடுகளில் நடைமுறையிலுள்ள இத்தகைய முறைமை பொருத்தமற்றது மற்றும் நாகரிகமற்றது என்ற கருத்தின் அடிப்படையிலல்ல. நிறைவேற்று ஜனாதிபதி முறையிலுள்ள பாதகமான மற்றும் பொருத்தமற்ற சரத்துக்களை நீக்குவதன் மூலம் அதனை நாட்டு மக்களுக்கு நன்மையளிக்கத்தக்கதொன்றாக ஆக்கிக்கொள்ள இயலும். இக்கடைசிச் சந்தர்ப்பத்தில்கூட ஜனாதிபதி அவ்வித நடவடிக்கையை மேற்கொள்ள முன்வருவாரானால், கட்சிபேதங்களை மறந்து ஏனைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் அவருக்கு ஆதரவளிக்கக்கூடும். ஆனால், தனது பதவியைக் காப்பாற்றும் நோக்கிலேயே ஜனாதிபதி கண்ணும் கருத்துமாக இருந்து வருவதாக எழும் விமர்சனங்களால் அவரது முயற்சி சந்தேகத்துடன் நோக்கப்படுகின்றது.

அதேசமயம், சமஷ்டிமுறை நிர்வாகத்தை ஏற்படுத்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கித்தானாகவேண்டும் என எவ்வித அவசியமும் கிடையாது. தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் காணப்படும் பொருத்தமற்ற விதிகளை நீக்கி, அந்நடைமுறையை மறுசீரமைப்பதன் மூலம் சமஷ்டி முறையொன்றினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த இயலும்.

அமெரிக்கா, வெனிசூலா மற்றும் மெக்சிக்கோ ஆகிய சமஷ்டி முறை கைக்கொள்ளப்படும் நாடுகளில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பொதுமக்களது வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படும் நடைமுறை வழக்கிலுள்ளது. தென்னாபிரிக்க நாட்டின் சமஷ்டி அரசமைப்பில் ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு வாக்குமூலம் நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் வழக்கம் கைக்கொள்ளப்படுகிறது.

இலங்கையின் ஜனாதிபதி நடைமுறையிலுள்ள பொருத்தமற்ற, நியாயமற்ற மற்றும் சர்வாதிகாரப் போக்கை வெளிப்படுத்தவல்ல விதிகளை நீக்கி, அதனை நியாயமான, சிறப்பானதொரு நடைமுறையாக மாற்றிக்கொள்ள இயலும். நீதித்துறையின் முடிவுகளுக்குக் கட்டுப்படும் விதத்தில் அத்துறைக்கு மதிப்பளித்துச் செயற்படும் விதத்தில் விதிகள் மாற்றியமைக்கப்படல் அவசியமாகும். அமைச்சரவையைத் தெரிவுசெய்யும் அதிகாரத்தைப் பிரதமருக்கு வழங்கும்வகை செய்யப்படலாம். அதேவேளை, ஜனாதிபதியாகச் செயற்படுபவர் அமைச்சரவையின் எந்தவொரு பதவியையும் வகிக்காதிருக்கும் வகையில் கட்டுப்பாட்டு விதி உருவாக்கப்படல் வேண்டும். அரசொன்று பதவியேற்று ஓராண்டு காலம் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் எத்தகைய காரணங்களால் கலைக்கப்பட



லம் என்ற நிந்தனைகள் உள்ளடக்கப்படல் வேண்டும். பாரதூரமான தவறொன்றிழைத்த ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றத்தக்க சட்டவிதிகள், சட்டமூலங்களில் இருப்பது போன்று வரையறை செய்யப்படுதல் அவசியமாகும். இவ்வித புனர்சீரமைப்புக்களை எவரும் எதிர்க்கப்போவதில்லை என்பதோடு, அப்புதிய நடைமுறை நாட்டுக்கு நன்மையளிப்பதாகவும் அமையும்.

எதிர்கால ஜனாதிபதியாக ரணில் தெரிவு செய்யப்படுவாரானால் மிகப் பயங்கரநிலை நாட்டில் உருவாகும் என்று அரசியலரங்கில் பலரால் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு. கட்சி என்பவற்றுடன் தொடர்புடையோரது கருத்துக்களால் அவர்கள் மத்தியில் பெரும் அழுத்தங்கள் நிலவுகின்றன. அதுமட்டுமன்றி, ஐ.தே. கட்சியைச் சேர்ந்தோர் சிலரது கருத்தும் இவ்விதத்தில் அமைந்துள்ளது. [illegible] ஓரளவு வன்மை இருக்கக்கூடுமாயினும், இதுவரை ஜனாதிபதிப் பதவியை வகித்தோரின் (டி.பி.விஜேதுங்கவைத் தவிர) செயற்பாடுகளில் குரூரத்தனம் இருக்கவில்லை எனக் கூற இயலாதுள்ளது. அவ்விதம் ஜனாதிபதியாகப் பதவி வகித்தோர் ஏதோ ஓர் அளவுக்காயினும் குரூரத்தன்மையுடன் செயற்பட்டவர்களே என்பதைப் பொதுமக்கள் நன்கறிவர்.

எதிர்காலத்தில் ரணிலுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி கிட்ட இடமளிப்பது பயங்கரமாய் அமையுமென ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீல.சு. கட்சியினர் எண்ணுவார்களாயின், அந்நிறைவேற்று அதிகாரங்களிலுள்ள நியாயமற்ற சரத்துக்களை நீக்கி அதனை இந்நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பாக மீளமைப்புச் செய்வதன் மூலம் இந்நாட்டு மக்களுக்கு ஏற்படவுள்ள கஷ்டங்களை விலக்கிக்கொள்ள இயலுமல்லவா?

அவ்வித மீளமைக்கப்பட்ட நடைமுறையை எதிர்க்கும் திறன் எவருக்கும் கிடையாதுபோகும். ஆனால, இவற்றுக்கு மாறாகத் தற்போது ஜனாதிபதிப் பதவி நடைமுறையைத் தாம் விரும்பும் வகையில் மாற்றியமைக்க சந்திரிகா முயன்று வருகிறார். ரணில் அப்பதவியைப் பெறும் வாய்ப்பைத் தடுத்து நிறுத்துவதுடன், தாம் தம்து தற்போதைய பதவியை விட்டுவிலகாமல் தொடர்ந்தும் அப்பதவியை வகிக்கும் விருப்பத்தின் பேரிலேயே சந்திரிகா தற்போது காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளார்.

இப்பிரச்சினையால் நாட்டில் சிக்கல் உருவாகுமானால் அதற்கு ஜனாதிபதி மட்டுமன்றி, ரணிலும்கூட ஓர் அளவுக்குப் பொறுப்பேற்க வேண்டும். ரணில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிப் பதவியையே விரும்புவாராயினும், அந்நடைமுறையை விடாப்பிடியாக அதனை நாகரிகம்மிக்க நியாயமான நடைமுறையாக மாற்றியமைத்து நடைமுறைப்படுத்த முடியுமானால்கூட, தமது பதவியை மேலும் தொடர்ந்து வகிப்பதற்கான வாய்ப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கிடைக்கப்போவதில்லை.

அதேபோன்று, ரணிலும் அவ்விதம் மறுசீரமைக்கப்பட்டதொரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறை பேணப்படுவதை விரும்பவில்லை. தமது மாமனாரான ஜே.ஆர். நடைமுறைப்படுத்திய சர்வாதிகாரப் போக்கிலமைந்த - கட்டுப்பாடற்ற - அதிகாரங்களுடன் கூடிய ஜனாதிபதி முறையே நடைமுறையிலிருக்க வேண்டுமென ரணிலும் விரும்புகிறார். கட்சியைப் புனரமைப்புச் செய்யவெனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டவேளைகளில், அதற்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி புனரமைப்புச் செய்யப்படவேண்டுமென ரணில் கூறிவந்தபோதிலும், ஒருபோதும் அது குறித்து அவர் அதிக அக்கறை எடுத்துக் கொண்டதில்லை. அவர் உண்மையில் பரந்த அதிகாரங்களுடன் கூடிய, ஜே.ஆர். நடைமுறைப்படுத்திய ஜனாதிபதிப் பதவி நடைமுறை தொடர்ந்திருப்பதையே விரும்பினார். பொதுமக்களது நலன் குறித்து அக்கறையற்ற ஆட்சியாளர்கள் மேலதிக அதிகாரங்களைக் கொண்டிருப்பதிலேயே அக்கறை காட்டுவர்.

ஜனாதிபதி சந்திரிகா, மீதமுள்ள பதவிக் காலம் குறித்து அலட்டிக்கொள்ளாதிருப்பது அரசியல் சூதொன்றில் ஈடுபட்டு வென்றெடுக்க இயலும் என்ற நம்பிக்கை காரணமாகவே எனக் கூறலாம். ஆனால், அண்மைய ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் வீடு, வாசல்களை இழந்து அநாதைகளாகியுள்ளனர். அவர்களது எதிர்பார்ப்புகள் எது



வும் நிறைவுசெய்யப்படும் நிலையிலில்லை. அவர்களது எதிர்பார்ப்புக்கள் நாளுக்குநாள் உயர்வடையக்கூடும். இடப்பெயர்வுடன் தொழில் முயற்சிகளையும் இழந்து ஏதுமற்ற அநாதைகளாக இப்பொதுமக்கள் அல்லற்படும் இவ்வேளையில், கோடிக்கணக்கான பொதுமக்களது நிதியை விரயம் செய்து தமது பதவியை நிலைநிறுத்திக்கொள்ளும் நோக்கில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்த முனைவது நியாயமானதுதானா?

அதேசமயம், கூட்டணி அரசினுள்ளும் புரிந்துணர்வும் ஒற்றுமையும் நிலவாதது வெளிப்படையாகத் தெரிகின்றது. மல்யுத்தக்களத்தில் மோதிக்கொள்ளத் தயாராயுள்ள நிலையில் கூட்டணியின் இரு பிரதான பங்காளர்களும் ஒரு தரப்பினரும் எதிராக மறுதரப்பினர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

ஒரு கல்லெறியில் ஒரு குருவியை வீழ்த்துவதென்றில்லாது, மூன்று குருவிகளை ஒரே தடவையில் வீழ்த்தும் முனைப்புடன் ஜனாதிபதி திட்டமிட்டுச் செயற்பட்டுவருவதாகத் தோன்றுகிறது. ஆனால், இம்மூன்று குருவிகளும் ஒரே திசை நோக்கிப் பறக்கும் குருவிகளல்ல; ஒவ்வொன்றும் வெவ்வேறு திசையில் பறக்க விழையும் குருவிகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே, ஜனாதிபதியின் இந்த இலக்கு சாத்தியமான பலனளிக்கும் எனக் கூறமுடியாதென்பதோடு, சிலவேளை இம்மூன்று குருவிகளும் ஒன்றுசேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ ஜனாதிபதியைக் கொத்திக் காயப்படுத்தத்தக்க நிலைமையும் உருவாகக்கூடும்.

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு வாடகைக்கு

இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள மாடி வீடு வாடகைக்குண்டு. 28.03.2005 பி.ப. 1.30 மணி தொடக்கம் 29.03.2005 முழுநேரமும் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: தே.அரவிந்தன், 0777 - 570098 (சி-41852)

## தவறிவிட்டது

கரணவாய் தெற்கைச் சேர்ந்த ஆறுமுகம் வினோதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.782034332V) முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி என்ற விலாசத்தில் அல்லது T.P.: 0773076884 தொடர்புகொள்ளவும். (சி-41852)

## உடன் விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள 4 சிறீ xxxx மொறிஸ் ஒக்ஸ்போட் மோட்டார் வாகனம் உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: செந்தில்மணி தவத்துரை, மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை.(43559)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா Prima புறொயிலர் குஞ்சுகள் 30.03.2005 மாலை விநியோகிக்கப்படும். Prima Broiler ஒரு குஞ்சு 40/-. தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி., பி.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி., தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை., மதுரா - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்., ராதா - மாவடி, வட்டுக்கோட்டை., றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி.
T.P.No.: 021 222 3529 (43608)

## சிலை திறப்புவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்29

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை முன்றிலில் அமைக்கப்பட்ட தடாகத்துடன் இணைந்த சரஸ்வதி சிலைத் திறப்புவிழாவும் இதனை உருவாக்கிய கலைஞர் நாகையா செந்தில்நாதனைக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

தடாகத்துடன் அமைந்துள்ள சிலையினை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சபா ஜெயராசா சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார்.

2004ஆம் ஆண்டு வெளிமாவட்டங்களுக்குக் கல்விச் சுற்றுலா மேற்கொண்ட தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் வழங்கிய அன்பளிப்பினால் இந்தச்சிலை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-204)

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,மார்ச்29

'அசேதன உப்புகளின் பண்பறி குறிப்பு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு 'யாழ். நியூ சயன்ஸ்' கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு ஆசிரியர் வி.சி.அன்பழகன் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (ஓ-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்29

மொறிஸ் செருலோ ஊழியர்கள் நடத்தும் விசுவாசிகளுக்கான விசேட கருத்தரங்கு எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் 3ஆம் திகதி மாலை 4.30 மணிக்கும் யாழ்ப்பாணம அசெம்பிலி ஒப் கோட் வழிபாட்டிடத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-202)

## நலன்புரி நிலையத்தில் மோதல்: கோழிக்கூடு தீக்கிரை; இருவர் காயமுற்றனர்!

வலி.வடக்கு,மார்ச்29

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம் ஒன்றில் இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து கோழிக்கூடு ஒன்று தீயிடப்பட்டதுடன் பெட்டிக் கடையொன்றும் அடித்து நொறுக்கப்பட்டது.

வலிகாமம் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம் ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தகராற்றின்போது கல்லெறிக்கு ஆளாகிய ஒரு பெண்ணும் ஆணும் காயமுற்றனர்.

இச்சம்பவங்கள் தொடர்பாக உடுவில் பிரதேச அரசியல்துறையிடம் முறைப்பாடுகள் செயயப்பட்டுள்ளன. (ஓ-86)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயிலின் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8 மணிக்குத் தெல்லிப்பழை தடை முகாமிலிருந்து மினிபஸ்ஸில் ஆலயத்திற்குப் பக்தர்களை அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (202)


YAMAHA
Touching Your Heart

யமஹா இலவச மெக்கானிக் சேவிஸ்

இடம்- யமஹா பிளாஸா
காலம்- ஏப்ரல்1ஆம்,2ஆம் திகதி
நேரம்- காலை9.00-மாலை5.00
யமஹா மோட்டார் கம்பனியும்
யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்
யமஹா பிளாஸாவும்
இணைந்து நடாத்தும்
அனைத்து ரக யமஹா
மோட்டார் சைக்கிள்களுக்கான
இலவச மெக்கானிக் சேவிஸ்
யமஹா கம்பனியின் விசேட
தொழில்நுட்பவியலாளர்கள்
கலந்துகொள்கின்றனர்
இந்நிகழ்வில் அனைத்து யமஹா
உரிமையாளர்களையும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
கேட்டுக்கொள்கின்றோம்



YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna.
021 4590 200
0777 563 803


## அகவை அறுபதில் நிறைவு காணும் எமது அன்பிற்குரிய அதிபர்

## செல்வி பிரியதர்ஷினி வடிவேல் அவர்களின்

(யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை)

## சேவை நலன் பாராட்டு விழா – 29.03.2005



### அதிபர் தரம் I
### மணிவிழாக் காணும் நாயகியே வாழ்க

மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்ற எமது மதிப்பிற்குரிய அதிபர் செல்வி பிரியதர்சிஷினி வடிவேல் அவர்களின் எடுத்துக்காட்டான சேவையினால் இன்று அகிலம் புகழ்பூத்து விளங்குகின்றது. அவரது அரிய சேவையினால் யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் சகல துறைகளிலும் புத்துணர்வு பெற்று விளங்குகின்றது. இன்று ஓய்வுபெற்றாலும் தங் களின் வழியில் இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடையும். எல்லாம் வல்ல உத்துங்க விநாயகனின் அருளாசி வேண்டி உடல் உள ஆரோக்கியத்துடன் சிறப்புற வாழ அன்புடன் தங்களை வாழ்த்துகின்றோம்.

யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை,
ஆனைக்கோட்டை. (43610)(42-18-34-24)

ஆசிரியர் குழாமும்
மாணவச் செல்வங்களும்.


## தேசிய ஆங்கில டிப்ளோமா

நாடுதழுவிய பொதுப்பரீட்சை - சாம்ஸ்டெக்
28 May 2005

### விண்ணப்பப் படிவம்
( வேறுதாளில்ப் பூர்த்தி செய்யவும் )

Name : ..........
Address : ..........
Date of Birth and Sex : ..........

Examination : கீழுள்ள ஒன்றினைத் தெரிவுசெய்க
- ❑ ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
- ❑ அலுவலர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
- ❑ பொதுத் தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா

22 புத்தகங்கள் கொண்ட பாடநெறி தேவை ❑ ஆம் ❑ இல்லை

Date .......... Signature : ..........

**குறிப்பு :**
- ❑ நேரடி அல்லது தொலைக்கல்வி வகுப்பிற்கு பதிவு செய்யாதவர்கள் உட்பட வயது, கல்வித்தகுதி வேறுபாடின்றி யாரும் விண்ணப்பிக்கலாம்.
- ❑ பரீட்சைக்கட்டணம் : ரூபா 500/-.
- ❑ விண்ணப்பத்தினை 4 * 9 அளவுள்ள உறையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 31.03.2005
- ❑ பாடவிதானம், மாதிரி வினாத்தாள் என்பன விண்ணப்பதாரிகளுக்கு 20.04.2005 இற்குமுன் அனுப்பிவைக்கப்படும்.
- ❑ 22 புத்தகங்கள் கொண்ட பாடத்தொகுதி தேவைப்படுவோர் அதற்கான கட்டணமாக ரூபா 500/- சேர்த்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பத்தினை 'PSALMS TECHNOLOGIES' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதான காசுக்கட்டளையுடன் அனுப்பவேண்டிய முகவரி :

PSALM TECHNOLOGIES,
22-1/4, GALLE ROAD, DEHIWALA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**கதிரவேலு சுதர்சனன்**
(B.A.)

யாழ்.பல்கலைக்கழகத்தில் லிகிதராகப் பணிபுரிந்து உதவிப்பதிவாளராகப் பதவியுயர்வு பெற்றிருக்கும் **உயர்திரு.கதிரவேலு சுதர்சனன் (B.A.)** அவர்களைப் பாராட்டுவதோடு மேன்மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று சகல துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ வாழ்த்துகின்றோம்.

இ.குமரன் (தமிழ்த்துறை).
மு.சிவநாதன் (நூலகம்).
ஐ.சுரேஸ்குமார் (முகாமைத்துவ வணிக பீடம்).
சீ.ஆனந்தராசா (உயர் பட்டப்படிப்புகள் பீடம்).
இ.சிவகுமார் (நூலகம்).

யாழ்ப்பாணம்.
(43602) (42-11-34)

## இரண்டாம் வருட இதய அஞ்சலி

தோற்றம்
22 – 07 – 1984



மறைவு
22 – 03 – 2003

### அமரர் கந்தசாமி சுஜிந்தன்

ஆண்டுகள் இரண்டு ஓடிமறைந்தாலும்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!
ஈண்டு உமது நினைவுடனேயே நாம்
இப் பூவுலகில் வாழ்ந்து வருகின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

– குடும்பத்தினர்.
(43609) (39-18-34-24)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### ஜோசவ் சிறில் ஆல்வினஸ்

மண்ணில் 18–04–1941
விண்ணில் 29–03–2004

மிகவும் இரக்கமுள்ள இறைவா உமது தாசனாகிய
அமரர் ஜோசவ் சிறில் ஆல்வினஸ் அவர்களை உமது
வான் வீட்டில் நித்திய இளைப்பாற்றினைப் பெற்று
நீங்காத ஒளியோடு வாழ வரமருள வேண்டும்
என நாம் விசுவாசத்துடன் உம்மிடம் மன்றாடிக் கேட்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரி,
மைத்துனர், இனத்தவர்.

நாரந்தனை.
(43603) (21-11-34)


## பாடசாலை, மற்றும் தனியார்கல்வி நிறுவனங்களில்க் கற்பிக்கப்படும் இலக்கண ரீதியிலான கல்வியே ஆங்கிலத்தினைக் கதைக்க முடியாததற்கான ஒரே காரணம்

மொழி முதலில் கதைக்கப்பட வேண்டும். ஒரு மொழியினைக் கதைப்பதற்கு முன் தரப்படும் இலக்கண ரீதியான விளக்கங்கள், அமைப்புகள் கதைக்க முடியாத தன்மையை ஏற்படுத்துகின்றது.

வெளிவந்துவிட்டது
### நடைமுறை ஆங்கிலம்

அன்றாடம் கதைக்கும் பல்லாயிரக்கணக்கான வசனங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஒவ்வொருவருடைய தேவைக்குமேற்ப மூன்று புத்தகங்களாக வெளிவந்துள்ளது.

பக்கங்கள் - 480. விலை ரூபா 540/-

| | | |
|---|---|---|
| ❑ ஆசிரியர்களுக்கானது | பக்கம் 480 | விலை 540/- |
| ❑ அலுவலர்களுக்கானது | பக்கம் 480 | விலை 540/- |
| ❑ மாணவர்களுக்கானது | பக்கம் 480 | விலை 540/- |

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய புத்தகங்கள்

### சலுகைக்கட்டணம்
### 31.03.2005 வரை ரூபா 300/- மட்டுமே

பழக்கப்படுத்தல் மூலமான இலக்கண மற்றும் சொல்வளத்துக்கான இக்கற்கையின் மூலம் ஆங்கிலத்தை முழுமையாக கதைக்க முடியும்

**மேலும் 31.03.2005 வரை ரூபா 300/- சலுகைவிலையில்**

| | | |
|---|---|---|
| ❑ அடிப்படை ஆங்கிலம் | பக்கம் 480 | விலை 540/- |
| ❑ பயன்பாட்டு ஆங்கிலம் | பக்கம் 480 | விலை 540/- |
| ❑ முழுமையான சிங்களம் | பக்கம் 480 | விலை 540/- |

**நேரடியாக அல்லது 'SAAMSTECH' என்ற பெயருக்கு 'JAFFNA' தபாலகத்தில் மாற்றத்தக்கதான காசுக்கட்டளையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.**

SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.

சலுகைக் கட்டணம் 31.03.2005 வரை மட்டுமே

## நெடுந்தீவு மெய்வன்மைப் போட்டி

# ஆறு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம்,மார்ச்29

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் இம்முறை ஆறு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

கள நிகழ்வுகள் நான்கிலும் தட நிகழ்வுகளில இரண்டிலும் சாதனைகள் புரியப்பட்டுள்ளன.

இதில் ஐந்து சாதனைகள் பெண்களினால் நிலைநாட்டப்பட்டுள்ளன.

நீளம் பாய்தலில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நா.அருள்ராஜ் 5.66 மீற்றர் பாய்ந்து முன்னைய 5.61 மீற்றர் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்நத இ.பிரமாலட்சுமி முன்னைய 3 நிமிடம் 19.80 செக்கன் என்ற சாதனையை 3 நிமிடம் 07.00 செக்கனில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

பல்துறை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீராங்கனை ந.கருணகலாதேவி குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல் ஆகியவற்றில் மூன்று புதிய சாதனைகளை நிலைநாட்டினார்.

குண்டெறிதலில் 7.33 மீற்றர் என்ற முன்னைய சாதனையை 7.38 மீற்றர்தூரம் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்தியும் -

தட்டெறிதலில் 20.63 மீற்றர் என்ற முன்னைய சாதனையை 22.67 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையையும் -

ஈட்டியெறிதலில் 21.45 மீற்றர் என்ற முன்னைய சாதனையை 23.26 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையையும் ஏற்படுத்தியுள்ளார்.

இவருக்கான பயிற்சிகளை முன்னாள் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தரும் தற்போதைய நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தருமான ந.விஜிதரன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)

## எச்.என்.பி. வெற்றிக்கிண்ண துடுப்பாட்டம்

# தபால் திணைக்கள, நல்லூர் செயலக அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம்,மார்ச்29

எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் வெற்றிக்கிண்ணத்திற்காக திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் தபால் திணைக்களம், நல்லூர் பிரதேச செயலக அணிகள் இறுதியாட்டத்தில் மோதுவதற்கு தகுதிபெற்றுள்ளன.

இச்சுற்றுப் போட்டியின் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில், யாழ்.தபால் திணைக்கள அணிக்கும் யாழ்.ஆஸ்பத்திரி அணிக்கும் இடையிலான மோதல் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.தபால் திணைக்கள அணியினர் 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

ஜெயச்சந்திரன் 19 ஓட்டங்களையும் முரளி 14 ஓட்டங்களையும் குணநீதி 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரி அணி வீரர் பவான் நான்கு ஓவர் பந்துவீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் சக்தி நான்கு ஓவர் பந்து வீசி 10 ஓட்டங்களைப் கொடுத்து மூன்று விக்கெட்டையும், குணா நான்கு ஓவர் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் திவகரன் நான்கு ஓவர் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

97 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய யாழ்.ஆஸ்பத்திரி அணி 15 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. தபால் திணைக்கள அணி 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியினரும் எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் அணியினரும் மோதினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணியினர் 20 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

தனுசியந்தன் 21 ஓட்டங்களையும் சர்வனந் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் வீரர்களான

சதீஸ் நான்கு ஓவர் பந்துவீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் விஸ்ணுவர்த்தன் நான்கு ஓவர் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ரமணன் நான்கு ஓவர் பந்துவீசி, 16 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

95 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் அணியினர் 17 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

ரமணன் 22 ஓட்டங்களையும் ஜெயறூபன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். நல்லூர் பிரதேச செயலக அணியினர் 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். (3-190)

## விளையாட்டு

# உலகக் கிண்ணத்துக்கான மகளிர் கிரிக்கெட் போட்டி

உலகக் கிண்ணத்துக்கான பெண்கள் கிரிக்கெட் போட்டியில் இந்திய வீராங்கனை தீபா முராதி ஓர் ஓட்டம் கொடுத்து 4 விக்கெட்டைக் கைப்பற்ற இந்தியா, தென்னாபிரிக்காவை வென்றது.

தென்னாபிரிக்காவில் இத்தொடர் நடக்கிறது. பிரிட்டோரியா நகரில் கடந்த சனிக்கிழமை நடந்த லீகபோட்டியில் இந்தியா - தென்னாபிரிக்க அணிகள் மோதின. தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்த அணி 34.3 ஓவரில் 80 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்தியத் தரப்பில் சுழற்பந்து வீச்சாளரான தீபா முராதி சிறப்பாக பந்து வீசி ஓர் ஓட்டம் மட்டுமே கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அமிதா சர்மா 3, நீதா டேவிட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

சுலபமான இலகைை விரட்டிய இந்திய அணி 25 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 81 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. 4 விக்கெட் வித்தியாசத்தில் சொந்த மண்ணில் தென்னாபிரிக்கா தோல்வி அடைந்தது.

மற்றைய போட்டிகளில் நியூஸிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையையும், இங்கிலாந்து 128 ஓட்ட வித்தியாசத்தில் அயர்லாந்தையும், ஆஸ்திரேலியா 79 ஓட்ட வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியையும் வென்றன. (3)

## நல்லூர்ப் பிரதேச உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,மார்ச்29

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ ஜொலி ஸ்ரார் வி.க. எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க.

★ திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க வி.க. எதிர் கொக்குவில் பொற்பதி வி.க.

★ காந்தி வி.க. எதிர் திருநெல்வேலி கலா மன்ற வி.க. (3-86)

## இலங்கைக் கிரிக்கெட் சபையில் குழப்பம்

இலங்கை கிரிக்கெட் சபையில் குழப்பம் நீடிக்கிறது. அரசு அமைத்த இடைக்கால சபைக்கு எதிர்ப்பு தெரிவித்து, சர்ச்சைக்குரிய திலங்கா சுமதிபாலா தலைமையில் போட்டிச் சபை அமைக்கப்பட்டுள்ளது.

பணம் கொழிக்கும் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்தவர் திலங்கா சுமதிபாலா. 1999 முதல் 2003 வரை பதவியில் நீடித்த இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உண்டு. குறிப்பாக 1999 இல் நடந்த உலகக் கோப்பை போட்டியைக் காண, கூலிப்படை தலைவர் தமிக்கா அமரசிங்கேவை அனுப்பி வைத்தது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. இந்த வழக்கில் சுமதிபாலா சிக்க, பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இவர் மீண்டும் தலைவராக முயல, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கா கிரிக்கெட் சபையைக் கலைத்து உத்தரவிட்டார். நிதி முறைகேடு, சரியாகக் கணக்குக்காட்டவில்லை என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அனைத்து நடவடிக்கைகளையும் அவர் நிறுத்தி வைத்தார். சபை பணிகளை நிர்வகிக்க, தொழில் அதிபர் ஜெயந்தா தர்மதாசா தலைமையில் 6 பேர் அடங்கிய இடைக்கால சபையை அறிவித்தார்.

இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசு அறிவித்த இடைக்கால சபைக்குப் போட்டியாக, நேற்றுமுன்தினம் சுமதிபாலா தலைமையில் 7 பேர் அடங்கிய புதிய சபையைத் தெரிவு செய்தனர். இதில் துலிப் மெண்டிஸ், அரவிந்தா டி சில்வா, ரொமேஷ் களுவிதாரணா போன்ற முன்னாள் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். (ஒ)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம் நவசக்தி - கரணவாய் அணிகள் மோதுகின்றன

வலி.வடக்கு,மார்ச்29

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நவசக்தி வி.கவும் கரணவாய் மத்தி வி.கவும் இன்று மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் மற்றோர் ஆட்டத்தில் அளவெட்டி விநாயக வி.கவும் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி.கவும் மோதுகின்றன. (3-86)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி ரசிகர்களைப் பரவசப்படுத்திய ஒரு போட்டியாக அமைந்திருந்தது.

மூன்று ஆட்டங்கள் நடைபெறுவதாகவிருந்த போதிலும், ஒரு கழகம் சமுகம் கொடுக்காமையால் இரு ஆட்டங்கள் மட்டுமே இடம்பெற்றன.

முதல் ஆட்டம் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ். லீக்கைச் சேர்ந்த வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்றது.

ஆட்டம் தொடங்கும்போது, சாதாரணமாகவே வீரர்களுடைய நகர்வுகள் காணப்பட்டன. ஆனால், சில நிமிட நேரத்தில் ஆட்டம் மிகவும் விரைவும் சுறுசுறுப்பும் பெறத்தொடங்கியது.

இரு அணிகளுமே கோல்கள் பெறும் முயற்சியுடன் தடுத்தாளும் முயற்சியிலும் கவனமாக ஈடுபடத்தொடங்கினார்கள். ஆதரவாளர்களும் வழமைபோன்று தமது அணிக்கான ஆதரவையும் விமர்சனங்களையும் போதியளவுக்கு வழங்கினார்கள்.

இந்த நிலைமையில் வளர்மதி விளையாட்டுக் கழக வலது முன்னணி வீரர் எரிதீஸ்வரன் எதிரணியினரை வெட்டி முன்நகர்த்திக்கொண்டு வந்த பந்தை கோல்கம்பத்திற்கு மிகவும் அண்மையாக வைத்துப் பலமாக உதைத்தபோது அதனை றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகத் தடுப்பாளர் தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால், அப்பந்து அவரின் கைகளையும் தள்ளிவிட்டு கோல் கம்பத்தினுள் நுழைந்ததன் மூலம் முதலாவது கோலை வளர்மதி விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து இரு அணிகளும் மேலும் விறுவிறுப்பாக விளையாடினார்கள். றெட்ரேஞ்சர் அணி தாமும் ஒரு கோலைப் பெறவேண்டும் என எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும், பயன்கிடைக்கவில்லை. இதேநேரம், மீண்டும் ஒரு கோலை வளர்மதி விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது.

உதயன்
ஊடக அனுசரணை

வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் பின்னணி வீரன் ஒருவன் எதிரணியினருக்கு மேலால் தூக்கி அடித்த பந்தை முன்னணி வீரர் உதயகுமார் பெற்று இலகுவாக முன்நகர்த்திச் சென்று அடித்து இரண்டாவது கோலைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொண்டார்.

முதற்பாதி ஆட்டம் 2:0 என்ற கோல்கணக்கில் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகத்திற்குப் பெரும் சோதனையானதாகக் காணப்பட்டது. எதிரணியினர் மேலும் கோல்களைப் பெறாவண்ணம் தடுத்தாட வேண்டியதுடன், கோல்களையும் பெறவேண்டிய நிலையும் காணப்பட்டது.

வளர்மதி விளையாட்டுக் கழகம் கோல்கள் பெறுவதிலும் பார்க்க எதிரணியினர் கோல்கள் பெறாமல் தடுப்பதில் அதிக கவனம் காட்டி விளையாடினார்கள்.

இந்தநிலைமையில் றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழக மத்திய பின்னணி வீரர் தயானந்தன் தனது நிலையில் இருந்து விடுபட்டு மேலே ஏறிநிற்க வலதுபக்க உள்ளணி வீரர் விநோத தனக்குக் கிடைத்த பந்தை முன்நகர்த்தி தயானந்தனிடம் கொடுத்தார்.

எதிரணியின் பின்னணி வீரர்கள் இருவரும் கோல்கம்பத்திற்கு அண்மையாகக் குறுக்கே மறிக்க இரு வீரர்களுக்கும் இடையால் தயானந்தன் பலமாக உதைத்தார். கோல்காப்பாளர் தடுக்க முயன்றும் பந்து கோல்கம்பத்தில் நுழைந்து றெட்ரேஞ்சர் அணிக்கான முதலாவது கோல் பெறப்பட்டது.

மேலும், இரு அணிகளும் மிகவும் இறுக்கமாக விளையாடத் தொடங்கிய சில நிமிட நேரத்தில் ஆட்டம் முடிவடைந்தது.

இதனால், வளர்மதி விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் றெட்ரேஞ்சர் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் தென்மராட்சி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

பல்கலைக்கழக அணி தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தை இலகுவாக வென்றுவிடும் எனற எதிர்பார்ப்புக்கு மத்தியில் போட்டி ஆரம்பமாகியது. தென்மராட்சி அணியினர் பல்கலைக் கழக அணியினா கோல்கள் பெறும் முயற்சிகளை முறியடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

இந்த நிலையில் பல்கலைக்கழக அணியினர் தம்மை உற்சாகப்படுத்திக்கொண்டு விளையாடத் தொடங்கினார்கள். அப்போது பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த இடதுபக்க உள்ளணி வீரர் அனந்தசயனன் மைதானத்தின் மத்திய பகுதியில் இருந்து பந்தை மிகவும் விரைவாகவும் வெட்டியும் கொண்டுவந்து பந்தை அடித்து பல்கலைக்கழக அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பல்கலைக்கழக அணியினருக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்த அவர்கள் தவறினார்கள். முதல்பாதி ஆட்டம் 1:0 என்ற கோல்கணக்கில் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற எழுச்சியுடன் மோதினர். இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் விளையாடினார்கள்.

இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்ற போதிலும், இரு அணிகளும் தவறவிட்டு இரண்டாம்பாதி ஆட்டத்தின்போது இரு அணிகளுமே கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இதேநேரம் தென்மராட்சி விளையாட்டுக்கழகப் பின்னணி வீரர் சௌதீபன், பல்கலைக்கழக அணியினர் கோல்கள் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் பலவற்றையும் முறியடித்து விளையாடி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுக்கொண்டார்.

ஆட்டமுடிவில் பல்கலைக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது. (ஒ-89)



கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனை ஒருவருக்கு திருமதி ஞா.கணேசநாதன் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். இப்போட்டிக்கு உடற்கல்வித்துறை விரிவுரையாளர் எஸ். கணேசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபூசைத் தினக் கட்டுரைப் போட்டி

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் அவரது குருபூசைத் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்துகின்றனர்.

மேற்படிப் போட்டிக்கான கட்டுரைத் தலைப்புக்கள் வருமாறு:-

- "நாவலர் வழிவந்த கதிரவேற்பிள்ளை"
- "ஈழத்துப் புலமையின் ஆழத்தை உலகறியச் செய்த சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை"
- "சதாவதானி என்றும் நினைவில் நிற்பவர்"

**போட்டி விதிகள்**

1. கட்டுரைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன், "ஏ4" தாளில் ஐந்து பக்கத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
2. ஆக்கங்கள் தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாகவோ அல்லது தெளிவான கையெழுத்துப் பிரதிகள் ஆகவோ இருக்கவேண்டும்.
3. போட்டியாளரின் முழுப்பெயர், விலாசம் என்பன வேறொரு தாளல் எழுதப்பட்டு ஆக்கத்துடன் இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும். அத்துடன், சமர்ப்பிக்கப்படும் கட்டுரை "தமது சொந்த முயற்சயலான ஆக்கம்" எனவும் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவேண்டும்.
4. போட்டி விதிகளுக்கு அமையாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது ஆகும்.
5. ஆக்கங்கள் யாவும் 07-04-2005ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ *"செயலாளர், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை* என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ சமர்ப்பிக்கப் படவேண்டும்.

செயலாளர்,
**சதாவதானி கதிரவேற்பிள்ளை,**
**சனசமூக நிலையம், பருத்தித்துறை.**

(சி-41864)(26-18-32)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர்
திருமதி மகாராணி கணேசன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தம்பிப்பிள்ளை அமிர்தம்மா**

அவர்களின் மறையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
**யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.**

(43615)(26-18-32)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 - 05 - 1930 | 28 - 02 - 2005 |



அமரர்

**வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு**

(முன்னாள் உரிமையாளர், நாகேஸ்வரி ஸ்ரோர்)

துன்பம் போக்கும் துணையாய் நின்றும்
அன்பின் சுவையில் அழ்ந்திட வைத்தும்
எங்கள் மனத்தின் இன்னிழல் ஆனீர்!
பொங்கும் துயரில் பொசுங்கா நெஞ்சம்
போனது எங்கே புண்ணிய வானே?

ஆனதோர் திங்கள் அமரராய் ஆகி
ஒரு திங்கள் என்ன ஓராண்டென்ன
வருடங்கள் கடந்தும் மறவோம் உம்மை
தேக வியோகம் எய்திய போதும்
பாகமாய் பங்காய் எம் மனம் தோறும்
எம்முயிர் தோறும் இணைந்தே நிற்பீர்
விம்மிடும் எங்கள் வேதனை தணிப்பீர்!

எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று 28-03-2005இல் நயினாதீவு, கங்காதரணி தீர்த்தக் கரையில் நடைபெற்றன. சபிண்டீகரணக்கிரியை மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (30-03-2005) புதன் கிழமை அன்னாரின் கந்தர்மட இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*22, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*
தொ. பேசி– 0777111307

(43621) (46-14-1[illegible]) **- குடும்பத்தினர்.**

## சுதேச மருத்துவர்களுக்கான கலந்துரையாடல் நாளை

கிளிநொச்சி,மார்ச்29

வன்னிப் பிரதேசத்தின் அனைத்துச் சுதேச மருத்துவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்குத் தமிழீழ நிர்வாக சேவையின் கிளிநொச்சி மாவட்ட ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவைகளால் கடந்த 14ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சுதேச மருத்துவ சிகிச்சை, அபிவிருத்தி என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் சகல சுதேச மருத்துவர்களையும் கலந்துகொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-202)

## கணனி வகுப்புகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

புங்குடுதீவு நலன்புரிச் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையின் ஆதரவுடன் வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தினால் நடத்தப்படும் கணனி வகுப்புகள் இன்று செவ்வாய்க் கிழமை புங்குடுதீவில் அமைந்துள்ள வளாகக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு சர்வோதயத்தின் அறங்காவலர் கேட்டுள்ளார். (ஐ-202)

## சிறுவர் தொடர்பான பயிற்சிப் பட்டறை

ஊர்காவற்றுறை,மார்ச்29

மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் விசேட பயிற்சிப்பட்டறை ஒன்று அடுத்தவாரம் ஊர்காவற்றுறை பிரதேச சபை பொதுநூலகக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறை அடுத்தமாதம் 4,5ஆம் திகதிகளில் ஒரு தொகுதியினருக்கும், 6,7ஆம் திகதிகளில் மற்றொரு தொகுதியினருக்கும் நடைபெறவுள்ளது.

ஒரு தொகுதியில் நாற்பதுபேர் வீதம் எண்பதுபேர் இந்தப் பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்கவுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் குறித்து இந்த விசேட பயிற்சிப் பட்டறையில் ஆராயப்படும்.

முன்பள்ளி ஆசிரியர்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி நிறுவனங்கள், மாதர்சங்கங்கள் ஆகியவற்றில் இருந்து தலா இரண்டு பிரதிநிதிகள் இந்தப் பயிற்சிப்பட்டறைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றுபவர்களுக்கு மதிய உணவு, போக்குவரவுப் படி ஆகியன வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஓ-16)

## திருட்டு மின்பெறுவோர் தொல்புரம் பகுதியில் அதிகரிப்பு

தொல்புரம்,மார்ச்29

தொல்புரம் பகுதியில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுபவர்களது எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தச் சட்டவிரோத மின் பாவனையினால் சட்டப்படி மின் இணைப்புப் பெற்றவர்களுக்கு வலுக்குறைந்த மின்சாரமே கிடைக்கிறது. ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் திருட்டு மின்சாரம் பெறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மின் பாவனையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-ரி)

## புத்தர் சிலை ஸ்தாபிப்பு

வலி.வடக்கு,மார்ச்29

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை அ[illegible]மன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள அ[illegible] மரத்தின்கீழ் கடற்படையினர் புத்தர்சிலை ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டுவருகின்றனர்.

இதே அரச மரத்தின் மற்றொரு பகுதியில் வைரவர் சூலம் வைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் வழிபாடுசெய்து வந்தனர். இந்நிலையில், வைரவர் சூலத்தின் இன்னொரு புறத்தில் கடற்படையினர் புத்தர்சிலையை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

புத்தர்சிலை வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் கடற்படையினருடைய கண்காணிப்பும் அதிகமாகக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. (ஓ-86)

**மருந்து விற்பனையாளர் தேவை**

மருந்து விற்பனையில் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும் அல்லது தபால் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

**தங்கவேல் பார்மஸி,** (43617)
406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**திருமணக் கார்** (குளிரூட்டியது) **வாடகைக்கு**



- திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நல்ல கார் சாரதியுடன் நியாயமான கட்டணத்தில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 077-308693, 0777-246117, 077-6018467. (43613)

தொடர்பு: ரட்ணம்,
22,சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(26-18-32)

உ

**ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்**



இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**



கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகைமூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839
Mobile: 0776 923623.

(C/41868)(26-18-32)

உ

# கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்திற்கு தீர்த்தக்கேணி அமைப்பதற்கான கேள்வி கோரல்

மேற்படி ஆலயத்திற்கு பின்வரும் அளவுகளில் தீர்த்தக்கேணி அமைப்பதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

35 அடி நீளம், 35 அடி அகலம்
15 அடி ஆழம் ஆகிய அளவுகள்
கொண்ட தீர்த்தக்கேணி வெட்டி
நான்கு பக்கமும் பொழிகற்களால் படிகள் அமைத்தல்

மேலதிக விவரங்களை *ஆலயப் பரிபாலனசபை, செயலாளர், ச.வீரசிங்கம்* அவர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**T.P.: இல. 021 - 4591913/ 222 - 6171.**

ஆலய பரிபாலன சபை,
**கைதடி இணுங்கித் தோட்டம்,**
**கந்தசுவாமி ஆலயம்.**

(சி-41873)(26-18-32)

# மரண அறிவித்தல்

## முத்துவேலு பஞ்சாட்சரம்



நாச்சிமார் கோயிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துவேலு பஞ்சாட்சரம் 26-03-2005 சனிக்கிழமை பிற்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு முத்துவேலு - செல்லம்மா ஆகியோரின் இளைய மகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் பாலேந்திரன் (காணி உத்தியோகத்தர், வவுனியா), இராசேந்திரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), இந்திரேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரலதா, குணாளசிங்கம் (உதவி திட்டமிடல் பணிப்பாளர், சாவகச்சேரி), கலாவதி (ஆஸ்திரேலியா), குமரநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற முருகேசு, பொன்னம்மா, அன்னம் ஆகியோரின் அனபுத் தம்பியும் காலஞ்சென்றவர்களான கோபாலகிருஷ்ணர், ஆனந்த கணேசன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், கிருஷ்ணசாமி, சண்முகசுந்தரம் (ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்) ஆகியோரின் சகலனும் திருமதி தியாகராசா தனலட்சுமி, திருமதி தங்கராசா நவமணி, மகேந்திரன் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் இராமகிருஷ்ணர், இராசலட்சுமி, இராசகோபால், நித்தியானந்ததேவி (லண்டன்), ஜெயகலாதேவி, விஜயகோபால் (ஜேர்மனி) ஆகியோரின் தாய்மாமனாரும் அரவிந்த், அருள்சாந், அயன்தன், அபிராம், மயூரன், முகுந்தன், கிருஷாந்தி, சுதாகரன், பகீரதி, சரசவாகினி, இந்திரகுமார், நர்மதா, ஹரிகரன், தர்சினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-03-2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

1043, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3808.

தகவல்:
பாலேந்திரன்,
இராசேந்திரன (மகன்மார்).

(43622)(46-26-14)

**UNIT**

PIII கணனிகள்
Intel 2.4 P4 கணனிகள் புதிய மொனிட்டருடன்

Whenever you thing about computer products the right place to touch first for Genuine, Technology & Innovation

@ Colombo based price

An Indian Engineer's Centre

Each Computer with finest test-ups & modeled finishing

3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்

இங்கு (கம்பியூட்டர் சம்பந்தமாக) நல்ல விலையில், சிறந்த தரத்தில் கிடைக்கும்

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலமூலப் பாட நூல்கள் இன்னும் வந்து சேரவில்லை

சாவகச்சேரி,மார்ச்29

ஆங்கில மொழிமூலம் 6 ஆம் தரத்தில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடநூல்கள் பெரும்பாலான பாடசாலைகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

பாடசாலைகளில் முதலாம் ஆண்டுத் தவணைப் பரீட்சைகள் ஆரம்பிக்கும் நிலையில் மேறபடி மாணவர்களுக்கான பாடநூல்கள் இதுவரை கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால், இம்மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

எனினும, சில ஆசிரியர்கள் இப்பாடநூல்களை கல்வி அமைச்சில் பெற்று மாணவர்களுக்கு ஓரளவு கற்பித்து வருகின்றனர். ஆனால, மாணவர்கள் நூல்களைப் பெற ஏற்ற நடவடிக்கையைக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மேற கொள்ளாமை குறித்து பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இம் மாணவர்கள் ஆங்கிலத்தில் கல்வி கற்கும் விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய முக்கிய பாடநூல்கள் இதுவரை வந்து சேரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் சிரமதானம்

தென்மராட்சி,மார்ச்29

அன்னை பூபதியின் நினைவு நாள்களையொட்டி சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் நேற்றுமுன்தினம் சிரமதானம் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகளும் பிரதேச மகளிர் அமைப்புகளும் இந்தச் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர்.

(ஒ-117)

# 'சுனாமி' பாதித்தவர்களுக்கு அமைச்சின் உதவிப் பொருள்கள்

சாவகச்சேரி,மார்ச்29

வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காகச் சுற்றாடல் நீர் வளத்துறை அமைச்சினால் ஒரு தொகுதி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவிப் பொருள்களை அமைச்சர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜிடம் வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென விளக்குகள், படுக்கை விரிப்புகள், உடுபுடைவைகள், பால்மா வகைகள், பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், பாய்கள் போன்ற அந்தப் பொருள்களே எடுத்துவரப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் குடத்தனை, தாளையடி, அம்பன் ஆகிய இடங்களைச் சேர்ந்த பகுதி மக்களுக்கும் முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்டு தென்மராட்சியில் கச்சாய் வீதியில் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கும் பெற்றோரை இழந்து மிருசுவில் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் தங்கியுள்ள குழந்தைகளுக்கும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, இப்பொருள்களின் ஒருதொகுதி வடமராட்சி கிழக்கில் உள்ள மக்களுக்கு கடறறொழிலாளர் சங்கம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

இந்த உதவிப் பொருள்கள் குவைத்நாட்டு அரசினால் அமைச்சுக்கு அனுப்பப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

# வளங்களைப் பயன்படுத்தினால் வாழ்க்கைத் தரம் தானே உயரும்

## 'கியூடெக்' இணைப்பாளர் அறிவுறுத்து

மாதகல்,மார்ச்29

எம்மிடையே உள்ள வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் 'கியூடெக்' அமைப்பின் இணைப்பாளர் ஜோசப்பாலா.

'கியூடெக் கரித்தாஸ்' நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் குழுவினால் இளவாலை வேளாண்மிய மக்கள் குழுவிற்கான கருத்தரங்கு மாரீசன் கூடல் றோ.க.த.க.பாடசாலையில் வேளாண்மியத் தலைவர் எஸ்.என். உதயகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட 'கியூடெக்' அமைப்பின் இணைப்பாளர் ஜோசப்பாலா கூறியதாவது:-

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பல இழப்புக்களை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அவர்கள தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு நாட்டின் பங்காளிகளாக மாறவேண்டும். அதற்கு எமது வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதே இலகுவான வழியாகும் - என்றார்.

இந்த நிகழ்வில் விவசாயப் போதனாசிரியர் மு.கந்தசாமி பேசுகையில் தெரிவித்ததாவது:-

வீட்டில் இருந்தபடியே ஒவ்வொருவரும் நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்தலாம் மழையை நம்பி விவசாயம் செய்வதனால் அந்த காலம் வரும்வரை விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பலரும் வீண்பொழுதைக் கழிக்கிறார்கள். இதறகு மாற்றீடாக எமது வளங்களை நாம் மேம்படுத்துவதன் மூலம் பயனடையலாம். இதற்கு கோழி வளர்ப்புப் பயனுள்ள வழியாகும்.

மேலும், ஏழைக் குடும்பங்கள்கூட கால்நடை வளர்ப்பில் ஈடுபடலாம். அவற்றுக்கு இயற்கை உணவுகளை வழங்கிப் பணத்தை மீதப்படுத்தலாம். இதன் மூலம் பணம் ஈட்டமுடியும். அவாகளுக்குத் தேவையான பாலையும் பெறமுடியும். இதனால், சத்துள்ள சமுதாயத்தை உருவாக்க முடியும்.

வீட்டில் வீண் விரயமாகும் நீரைப் பயன்படுத்துவதன் மூலமாக மரவள்ளி, தக்காளி, முருங்கை போன்றவற்றை வளர்த்து ஏழைக் குடும்பங்கள் தங்கள் அன்றாடத் தேவையை நிறைவு செய்யலாம் - என்றார்.

(ஒ-95)

## கவனயீனத்தால் பெண்ணுக்கு எரிகாயம்

'அரிக்கேன்' விளக்குக்கு மண்ணெண்ணெய் என்று நினைத்து பெற்றோலை ஊற்றிய போது எழுந்த தீப்பிளம்பால் பெண்ணொருவர் எரிகாயமடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி கல்வயலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ச.சற்குணேஸ்வரி (வயது 27) என்பவரே எரிகாயங்களுக்கு இலககான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இரு தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் பெறறோல்மக்ஸ் விளக்கு வெடித்து ஒருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

# கட்டாக்காலி நாய் ஒழிப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

நவாலியிலும் - மானிப்பாயிலும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விலங்கு விசர்நோய்த் தடுப்புத்திட்டத்தின் கீழ் வளர்ப்புநாய் அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதனை நாய் வளர்ப்போர்கள் பெறாவிடில் அந்த நாய்களும் கட்டாக்காலிகளாகக் கணிக்கப்படும். இதன் அடிப்படையிலேயே கட்டாக்காலி நாய்களை அழிக்கும் திட்டத்தை வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைத் திட்டமிடல் பிரிவு நடைமுறைப் படுத்துகின்றது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் கிராமங் கிராமமாக நாய்களை அழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். இப்பகுதியில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும்· இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, கட்டாக்காலி நாய்கள் அதிகம் உள்ள இடங்கள் பற்றிய விவரங்களை மானிப்பாய் பிரதேச சபையின் திட்டமிடல பிரிவிற்குப் பொதுமக்கள் அறிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வளர்ப்பு நாய்களுக்கான அட்டைகள் பெறாதவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் - அட்டைகள் பெறப்படாது எவரும் நாய வளர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் - எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-185)

## மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி,மார்ச்29

வீதி வளைவொன்றில் திரும்பும் போது மோட்டார் சைக்கிள் தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த இருவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை மாலை மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.


வரணி குடமியனைச் சேர்ந்த நடராசா நடேஸ (வயது 28), தர்மரத்தினம் ராஜேஸ்வரன் (வயது 20) ஆகியோரே இதில் காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஒ-117)

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற "இந்துதீபம்" நூல் வெளயீட்டு விழாவில் கலந்துகொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், பாடசாலை அதிபர் செல்வி பா.மார்க்கண்டு, முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம், கலாநிதி மனோன்மணி சண் முகதாஸ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், யாழ்.கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி எஸ்.தனபாலன் மூத்த பத்திரிகையாளர் லயன் செல்லப்பா நடராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (எ)



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் சிரேஷ்ட மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும்விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் உப அதிபர் திருமதி பு.மனோகரன், அதிபர்.க.ஆனந்தராசா ஆகியோர் முறையே சிரேஷ்ட மாணவர்களுக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம். (எ)



அண்மையில் நடைபெற்ற நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி முகாமையாளர் சுவாம்பிள்ளை ஹென்றி மங்கள விளக்கேற்றி விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் திருமதி ரூபசிங்கம், கோட்டகல்விப் பணிப்பாளர் கே.அரசரத்தினம், கல்லூரி முதல்வர் அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம்: நெடுந்தீவுச் செய்தியாளர்).



கரவெட்டி திரு இருதயக்கல்லூரியில் நடைபெற்ற ஆங்கில செயற்பாட்டு அறைத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் செயற்பாட்டறையினை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் -செயற்பாட்டறையின் பொறுப்பாசிரியர் அருட் சகோதரி எம்.சிறியபுஸ்பம் உரையாற்றுவதையும் படங்களில் [illegible] பாடசாலை அதிபர் ரீ.மனோகரன், உப அதிபர் எம்.ஜெபரட்ணம் ஆகி யோரும் படத்தில் உள்ளனர். (எ-190)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




பளை, வண்ணாங்கேணியைச் சேர்ந்த திரு.திருமதி **குமணன் – தர்மேந்தினி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் கார்த்திக் தனது முதலாவது பிறந்தநாளை 24.03.2005 வியாழக்கிழமை தங்களது இல்லத்திலும் 28.03.2005 திங்கட் கிழமை இத்தாலியிலுள்ள மில்லியா வரவேற்பு மண்டபத்திலும் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

செல்வன் கார்த்திக்குட்டியை அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா குலதீபன் (லண்டன்), சின்ன மாமா (மயதீபன்-கனடா), சுபா அத்தை, நிருபா அத்தை, சின்ன அம்மப்பா, அம்மம்மா, குட்டி மாமா, ரமணா, ஆசைச் சித்தி டிலானி, குட்டிச் சித்தி யனுஜா, பூட்டிமார், சித்தப்பா, சித்தி, தம்பி செந்தூரன், கனடாவில் இருக்கும் அத்தை நிரூசா ஆகிய அனைவரும் காளி அம்பாளின் அருளால் சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து பல்லாண்டு காலம் நீடூழி வாழவேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றோம்.

**இ.தர்மகுலசிங்கம் - அருந்ததி**
(பேரன், பேர்த்தி).
கண்டி வீதி, பளை.

(43584)(50-11-16)



# JAFFNA MEDICAL ASSOCIATION TEACHING HOSPITAL, JAFFNA

## Annual General Meeting

The Council Members have decided to have the Annual General Meeting, to elect New members on 31st March 2005 at 11.30 at the Clinical Lecture Hall, Teaching hospital Jaffna.

The Office bearers will be elected

All the Members and Doctors are cordially invited.

**Teaching Hospital,**
**Jaffna.** (C/41684)(26-11-18) **Secretary, JMA.**



Moorthy Lazer Digital Colour Lab

## இலவச பயிற்சியுடன் வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் Photo Graphing & Photo Printing
போன்ற துறைகளில் பயில ஆர்வமுள்ள
இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன
விண்ணப்பதாரிகள் வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் போன்ற
பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிக்கலாம்
முன் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது
விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 30.03.2005 ஆம் திகதிக்கு முன்
எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அழைக்கின்றோம்



தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்,
யாழ் வீதி, மானிப்பாய்.
தொ.இல. 021 222 2884


## நன்றி ஆராதனை

யாழ்ப்பாணம்,மார்ச்29

சுன்னாகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் நன்றி செலுத்தும் ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும்.

ஆச்சிரம ஸ்தாபகர் அருள்திரு.சேவக் எஸ். செல்வரத்தினத்தின் 32ஆவது நினைவாகவே இவ்வாராதனை நடைபெறவுள்ளது. (ஓ-202)

## மாடு முட்டி குடும்பஸ்தர் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்29

நுணாவில் பகுதியில் மாடு முட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நுணாவிலைச் சேர்ந்த செல்லத்துரை கனகலிங்கம் (வயது55) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

இவர், யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.(ப-12)

## கச்சாயில் இளைஞனுக்கு வாள்வெட்டு

தென்மராட்சி,மார்ச்29

இரவு வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்த இளைஞரை அழைத்த இனந்தெரியாத நபர்கள் அவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தினர். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் கொடிகாமம், கச்சாய் வீதி, கிராம சபை ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த வேல்நாயகம் மாறன் (வயது 23) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-117)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 26.03.2005 நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:

முதலாம் பரிசு: இல. 2769
இரண்டாம் பரிசு: இல. 4426
மூன்றாம் பரிசு : இல. 2856

ஆறுதல் பரிசுகள்:

| | | |
|---|---|---|
| 3874 | 2401 | 444 |
| 3555 | 694 | 1477 |
| 3987 | | |

**இந்து வாலிபர் சங்கம்,**
**வட்டுக்கோட்டை.**

(43600)(42-11-18-26)



யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும்
**தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம்** அவர்களின்
107 ஆவது பிறந்ததினத்தை நினைவுகூரும்
நன்றி செலுத்தும் வழிபாடு

இடம்: சென்.ஜோன்ஸ் ஆலயம், சுண்டுக்குளி,
காலம்: 31-03-2005 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணி
செய்தி வழங்குபவர்:
அருட்தந்தை M.X.கருணாரட்ணம் அடிகளார்
(நாவாந்துறை பங்குத் தந்தை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்
43599)(21-11-18-26) யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், யாழ்ப்பாணம்.



## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

**கருணாநிதி கருணானந்தன்**

காங்கேசன்துறை, காட்டடைப்பு வீதியைச் சேர்ந்த **கருணாநிதி கருணானந்தன்** அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (29-03-2005) செவ்வாய்க்கிழமை இல.47/1, சஞ்சி ஆராய்ச்சித் தோட்டம், கொழும்பு - 12 இல் நடைபெறும் இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்வதோடு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
தொலைபேசி இல. 112 332535. திருமதி க.சந்திரமலர்
(43593)(46-11-18-26) (மனைவி).



## உடன் விற்பனைக்கு

4.2kw (கு.மா) வலுவுடைய மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773147400
I.S.P. கொமினிக்கேசன்,
தூபி வீதி, வல்வெட்டித்துறை.
(43596)



## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவரான
**வேலுப்பிள்ளை இராமலிங்கம்**

அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகவும் துயரமடைகின்றோம். அவரது மறைவினால் கவலையில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

(43594)(26-11-18) ரவி, ரஜி சகோதரர்கள்,
நல்லூர்.



# 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்: 06.04.1919 விண்ணில் 27.02.2005



தாயே!
நீங்கள் சொர்க்கம் சென்று
சொற்ப நாள் தான் ஆனதம்மா!
ஆனாலும் சொரிந்த கண்ணீர் ஓயவில்லை
அருகிலே ஆயிரம் உறவுகள் இருந்தும்
இதயத்திற்கு அருகிலே இருந்தவர் நீங்கள்
அல்லவோ--- ?
ஏழேழு பிறவிக்கும் உங்கள் அன்பில் – நனைய
வேண்டும் மீண்டும் வந்து விடுங்கள் தாயே!

இன்று (29-03-2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

திருமதி
## பொன்னையா வள்ளிப்பிள்ளை

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

C-42861) (53-11-18-26)



பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் இலக்கண ரீதியான கல்வியே ஆங்கிலத்தினைக் கதைக்க முடியாத நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

புதிய முறையிலான, பழக்கப்படுத்தல் மூலமாக இலக்கணம் மற்றும் சொல்வளத்தைக் கற்பிக்கும் SAAMSTECH இன் பாடநெறி -கதைப்பதற்கானது.

விடுமுறைகாலத் தபால் மூலப்பாடநெறி
## SPOKEN ENGLISH

பாடசாலை மாணவர்களுக்கான SAAMSTECH இன்
**ஆங்கில டிப்ளோமாச் சான்றிதழ்**

~~1000/-~~ சலுகைக் கட்டணம் : ரூபா 250/-
விண்ணப்பிக்கும் கடைசிநாள்: 31.03.2005

### இறுதிச் சந்தர்ப்பம்

இவ்விண்ணப்பத்துடன் '**SAAMSTECH**' என்ற பெயருக்கு '**JAFFNA**' தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூபா 250/- இற்கான காசுக்கட்டளையினை அனுப்பவும்.

விண்ணப்பங்களை பாடசாலை அதிபரிடமும் பெறலாம்

**சலுகைக்கட்டண விண்ணப்பப்படிவம்**

பெயர் : ........................................
வகுப்பு மற்றும் பாடசாலை :........................................
முகவரி : ........................................

31.03.2005 இற்குப் பின் விண்ணப்பிப்பவர்கள் ரூபா 1000/- இற்கான சாசுக்கட்டளையினை அனுப்பவேண்டும். (43535)

SAAMSTECH, 841, Hospital Road, Chundikkuli, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனி மாதம் 17 ஆம் நாள் (30.03.2005) புதன்கிழமை காலை 8.47 மணிமுதல் 9.56 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது ஏக புத்திரன் **கஜேந்திரன்** (கஜன்) அவர்களுக்கும்





எமது புத்திரி **மதிவதனி** (மதி) அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி ச.நவரத்தினம்
557/7, மதவடி ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு) (43629)(29-14-17)

திரு.திருமதி செ.இராஜதுரை
56, கேசாவில் பிள்ளையார் வீதி,
யாழ்ப்பாணம்.


## தொடரும் வேலைநிறுத்தம்

சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரை மீண்டும் இணைத்துக்கொள்ள யாழ்.பல்கலைப் பேரவை எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டித்து கடந்த வியாழக்கிழமை பல்கலை ஊழியர் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. இதனால், நேற்றுப் பல்கலைக்கழக இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. (எ-12-86)

## பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு நேற்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ். நாகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை கண்டாவளை கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியைப் பெருந்தோட்டப் பகுதிப் பொறுப்பாளர் து.நக்கீரன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரினை தமிழீழ நிர்வாக சேவையின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் ராதை ஏற்றினார். கிராமங்களில் நடைபெறவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக இந்த நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது. இந்த நிகழ்வில் பலர் கருத்துரைகளை வழங்கினார்கள். (8-352)

## உரிய நேரத்தில் உறுதியான முடிவுகளை அதிரடியாக அறிவிப்பார் ஜனாதிபதி?

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்கு விற்பனை என்பன குறித்து தீர்மானமொன்றை எடுப்பதற்கான நேற்றைய விசேட அமைச்சரவைக் கூட்டத்தை அரசு ரத்துச்செய்தாலும் இதுவிடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரியநேரத்தில் உறுதியான தீர்மானத்தை எடுப்பாரென்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இலங்கை மின்சாரசபை 8 ஆயிரம் கோடி ரூபாவையும் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம் 800 கோடி ரூபாவையும் திறைசேரிக்குச் செலுத்த வேண்டியுள்ள நிலையில் அதுதொடர்பான தீர்மானங்களை ஜனாதிபதி எடுப்பாரென்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

முன்னதாக நேற்றுமுன்தினம் இரவு தேசியத் தொலைக்காட்சிக்கு வழங்கியிருந்த பேட்டியில், மின்சாரசபையின் 14 ஆயிரம் ஊழியர்களின் சுயநலப் போக்குக்காக இரண்டு கோடிப் பொதுமக்கள் பாதிப்படைய இடமளிக்கப்போவதில்லையென்றும் இவ்விடயத்தில் தாம் கூறிய நடவடிக்கைகளை எடுப்பதில் உறுதியாக உள்ளார் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று நடைபெறவிருந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டமையானது அரசின் உயர்மட்ட அமைச்சர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, இது விடயத்தில் ஜனாதிபதி திடீரென அதிரடி முடிவுகளை அடுத்து அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை என்று குறிப்பிட்டன அந்த வட்டாரங்கள். (எ-க)


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இளையவி கதிரவேலு**

தோற்றம் 05~09~1930 மறைவு 29~03~1987

அப்போது அரவணைத்து பாசத்துடன் எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்களைப் பிரிந்த துயரை எண்ணித் தினம்தினம் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தெல்லிப்பழை. (43630)(29-14-17) மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 28 ~ 05 ~ 1929



மறைவு 28 ~ 02 ~ 2005

**திருமதி பரிமளம் கிருஷ்ணர்**

கடந்த 28.02.2005 திங்கட்கிழமை சிவபதமெய்திய எங்கள் அன்புத் தாயாரின் மறைவுச் செய்தியினையறிந்து எமக்குப் பல்வேறு வகைகளிலும் உதவி பல புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

30.03.2005 புதன்கிழமை பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திரு.கி.சிவப்பிரகாசம்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
(துணுக்காய் கல்வி வலயம்) சமாதான நீதிவானும்.

செல்வச் சன்னதி கோயிலடி,
தொண்டைமானாறு. T.P. : 0712510343 (43624)(29-14-17)

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தேவை. நேரில் வரவும்.

**த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்**
இல. 21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (C/41876)(35)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**
29.03.05 முதல் மாதவன், சதா, விவேக் நடித்த
**எதிரி** (ரீகல்)
கா.நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே)

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
29.03.05 முதல் சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த
**ஏய்** (ரீகல்)
கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)
விரைவில் **குருதேவா**

**ராஜா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
**லண்டன்** (ரீகல்) இயக்கம்: சுந்தர் C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
சூர்யா, ஜோதிகா நடித்த
**மாயாவி** (ரீகல்)
தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே.)

**மனோகரா யாழ்ப்பாணம்**
பார்த்திபன், காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த
**கண்ணாடி பூக்கள்**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (ரீகல்)

## கண்ணீர் அஞ்சலி



**சி.கணபதிப்பிள்ளை** (அரசு மாஸ்டர்)

ஈழத்தில் அராலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்துவந்தவருமான சி.கணபதிப்பிள்ளை (அரசு மாஸ்ரர்) ஆசிரியர் அவர்கள் (24.03.2005) வியாழக்கிழமை அதிகாலை இந்தியாவில் காலமானார்.

இவர் பண்டாரவளை வட்டவத்தை அ.த.க. வித்தியாலயம், வேலணை ஐயனார் வித்தியாலயம், துரைச்சாமி ம.மகா வித்தியாலயம், சேனையூர் மகா வித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி, முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றியவரும் யாழ்.முறைசாரக் கல்வித் திணைக்களத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றி ஒய்வுபெற்றவரும் ஆவார்.

கற்பனைகளுக்கும் மதிப்பீட்டிற்கும் அப்பாற்பட்டு விலைமதிக்க முடியாத இவரது சிற்பத் திறமையை இலங்கை, வெளிநாடுகளிலும் காணலாம். இவரால் உருவாக்கப்பட்ட சிற்பங்களில் குறிப்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள சிவன்கோயிலின் மஞ்சம், நந்தி இலட்சினைகள் யாழ்.இந்துமகளிர் கல்லூரிப் பொன்விழா ஞாபகார்த்த சரஸ்வதி சிலை என்பன இவரின் பெயரையும் புகழையும் என்றும் சொல்லும். மேலும்,

யாழ்.திருநெல்வேலி அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோயிலில் உருவான சிற்ப சித்திரத்தேரின் நிர்மாணக்குழுத் தலைவராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர். இவர் இடம்பெயர்ந்து வசித்துவந்த புதுக்குடியிருப்பு, இந்தியாவிலும் தனது திறமையை நிருபித்தவர். எனறும் இவர் வடிவமைத்த முன்றுவாசல், வில்லு, பூமணவறைகள் லண்டன், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ் போன்ற நாடுகளிலும் இவர் பெயரைச் சொல்லியபடி இருக்கும். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 30.03.2005 புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த சிற்பவித்தகரின் ஆத்மசாந்திக்கு நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

திருநெல்வேலி (43627)(29-14-17) [illegible]

## மரண அறிவித்தல்கள்

### விக்கினேஸ்வரன் சிறிகுமார்

(கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர்)



கோண்டாவில் கிழக்கு, கொட்டைக்காடு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் சிறிகுமார் 28-03-2005 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரன் மற்றும் யோகராணி தம்பதியினரின் மூத்த புதல்வனும் தயாலக்சுமியின் அன்புக் கணவரும் தயாவரன், சிறிகரன், குகபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுமார், மோகனதாஸ (லண்டன்) காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் கமலினி (நோர்வே) செல்வமலர், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தகுமார் (நோர்வே) சசிரூபன் (யாழ் பல்கலைக்கழக ஆய்வுகூட உதவியாளர்) ஜீவானந்தன் (லண்டன்) தாரணி, தயாளினி, தயாவதி, தயாரூபி தயானந்தன் (சுவிஸ்) காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தயாச்செல்வி, தயாஜோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொட்டைக்காடு வீதி,*
*கோண்டாவில் கிழக்கு*
*கோண்டாவில்* (43626)(35-29-14-17)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னையா சோதிநாதன்

(ஓய்வுபெற்ற ஒப்புநோக்காளர், வீரகேசரி)



பண்ணாகத்தைச் சேர்ந்த சின்னையா சோதிநாதன் அவர்கள் நேற்று (28.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - அமுதவல்லி தம்பதிகளின் மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் பிரதீபன் (காப்பாளர், இ.போ.ச., காரைநகர்), அகிலன் (லண்டன்), சகாயநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கமலதாசனின் அன்புமிகு மாமனாரும் அமரர் தியாகராசா ஆசிரியர் சத்தியமூர்த்தி கனகநாயகம் J.P. (முகவர், சர்மிளா இன்ஸ்) அமரர் கோமளாதேவி தயாபரசிவம் (ஓய்வுபெற்ற மலேரியாத் தடுப்பு உத்தியோகத்தர்) திருமதி அன்னரத்தினம் திருமதி திலகவதி (கிராம அலுவலர்), வைகுந்தவாசன், வள்ளுவதாசன் (இராமநாதன் நுண்கலைப்பீடம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பணியாளர் - இ.போ.ச.), திருமதி கமலாதேவி சிவசுப்பிரமணியம் திருமதி புஸ்பலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (43624)(29-14-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரசபை மறுசீரமைப்பு, பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்கு விற்பனை:

# ஜே.வி.பி. எதிர்ப்புக்கு அடிபணிந்தது அரசு!

## பிரச்சினையைத் தவிர்க்கும் நோக்கில் விசேட அமைச்சரவைக் கூட்டம் ரத்து

கொழும்பு,மார்ச்29

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைத்தல் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை விற்பனைசெய்தல் ஆகியவற்றில் முனைப்பாக இருந்த அரசு, இதுவிடயத்தில் அதன் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியினதும் அந்தக் கட்சி சார்பான தொழிற்சங்கங்களினதும் கடும் எதிர்ப்புக்கு முகம்கொடுக்கமுடியாமல் பணிந்தது.

இந்த விடயங்களை இறுதி செய்வதற்காக நேற்றுக்கூடவிருந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தை - கடும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு வேறு வழியின்றி - கடைசி நேரத்தில் ரத்துச் செய்தது அரசு.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினதும் அந்தக் கட்சி சார்புடைய தொழிற்சங்கங்களினதும் கடுமையான எதிர்ப்பினையடுத்து நேற்று நடைபெறவிருந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தை ரத்துச்செய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தள்ளப்பட்டார்.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக்கூட்டுத்தாபனப் பங்குகள் விற்பனை தொடர்பில் இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்காகவே ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க தலைமையில் இந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவிருந்தது.

இந்தநிலையில் ஜே.வி.பியின் இரு அமைச்சர்களான அநுரகுமார திஸநாயக்க, கே.டி.லால்காந்த ஆகியோரும் ஜே.வி.பி.பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவும் நேற்றுக்காலை நிதியமைச்சில் நிதியமைச்சர் சரத் அமுனுகமவையும் திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவையும் சந்தித்து இரண்டு மணிநேரம் முக்கிய பேச்சுக்களை நடத்தினர்.

மின்சாரசபை தனியார் மயமாக்கல் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்கு விற்பனை தொடர்பில் அரசு வகுத்துள்ள திட்டங்களில் ஜே.வி. பியினருக்கு உடன்பாடு இல்லையென்றும் அதையும் மீறி அமைச்சரவையில் இந்த யோசனைகள் நிறைவேற்றப்பட்டால் உண்மை நிலையை மக்களுக்குக் கூறவேண்டிவருமென்றும் ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் இந்தச் சந்திப்பின்போது திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி திட்டங்களை முறையாகப் பரிசீலிப்பதா அல்லது அவசரமாக இந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுவதா என்பதை அரசே தீர்மானிக்க வேண்டும் எனவும் -

ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை எந்தவகையிலும் மாற்றிக்கொள்ளாதெனவும் - இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி. தரப்பு மேலும் தெரிவித்தது என அறியவருகின்றது.

இந்தச் சந்திப்பையடுத்து ஜனாதிபதி மாளிகைக்கு விரைந்த நிதியமைச்சர் சரத் அமுனுகம, ஜனாதிபதி சந்திரிகாவுடன் இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடினார். அதையடுத்து, நேற்றைய விசேட அமைச்சரவைக் கூட்டத்தை ரத்துச்செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இது பற்றிய விவரம் ஜே.வி.பி. முக்கியஸ்தர்களுக்குத் தொலைபேசியூடாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று சிலவேளை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்று குறிப்பிட்ட யோசனைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் அமைச்சரவையிலிருந்து வெளிநடப்புச்செய்யவும்பின்னர் அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்வதற்கும் ஜே.வி.பியினர் தீர்மானித்திருந்தனர் என அந்தக் கட்சி வட்டாரங்கள் கூறின.

அதுமட்டுமல்ல, அத்தகைய நிலையில் மின்சார சபையையும் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தையும் வேலைநிறுத்த நடவடிக்கை மூலம் ஸ்தம்பிக்கச் செய்யவும் -

அதன் மூலம் அரசுத் தரப்புக்கு பலமான நெருக்கடியைக் கொடுக்கவும் -

ஜே.வி.பியின் ஆசீர்வாதத்தோடு அதன் தொழிற்சங்கங்கள் தயார்நிலையில் இருந்தன என்று கூறப்படுகின்றது.

ஆனாலும், விசேட அமைச்சரவைக் கூட்டத்தை ஒத்திவைத்ததன் மூலம் இதுவிடயத்தில் தனது தீர்மானத்தை முன்னெடுப்பதை அரசு தள்ளிப்போட்டிருக்கின்றது. இதனால், ஜே.வி.பியும் இவ்விடயத்தில் தனது கடும் எதிர்ப்பை வெளிக்காட்டும் நடவடிக்கைகளை ஒத்திவைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (எ-க)

## அம்பாறை அரசியல் பொறுப்பாளர் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டார்

கொழும்பு,மார்ச்29

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் குயிலன்பன் விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார். அவர் கல்முனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் புலிகளின் மற்றொரு உறுப்பினரான ரதனும் வேறு சிலரும் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் திருக்கோவில் விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்து குயிலன்பன் தாக்கப்பட்டார். முறுகலைத் தணிக்கச் சென்றவேளையிலேயே விசேட அதிரடிப்படையினரால் அவர் தாக்கப்பட்டார் எனப் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## எரிபொருளுக்கு நேற்று காத்திருந்த மக்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்29

குடாநாட்டில் நேற்று எரிபொருள் நிரப்புவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாகக் காத்திருந்தனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகியவற்றின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க மேற்கொண்ட முஸ்தீபைத் தொடர்ந்தே இந்தநிலை ஏற்பட்டது.

### கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்த இவர்களை 5ஆம் கட்டைப்பகுதியில் வைத்து வழி மறித்த சிலர் இரு போராளிகளையும் வெட்டிப் படுகொலை செய்தனர் என்று கூறப்படுகின்றது. கருணா குழுவினரும் இராணுவத்தினரும் இணைந்தே இந்தப் படுகொலைகளைப் புரிந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ-7)

## புலிகளின் வவுனியா அலுவலகம் மீது நேற்று அதிகாலை குண்டுத் தாக்குதல்!

### பொது மகனும் ஊழியர் இருவரும் காயம்

வவுனியா,மார்ச்29

விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று அதிகாலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் ஊழியர்கள் இருவரும் பொதுமகனொருவரும் காயமடைந்தனர்.

அதிகாலை 5.30 மணிக்கு அலுவலகத்தின் முன்பகுதி தாக்குதலுக்கு இலக்கானது. வெளியிலிருந்து வீசப்பட்ட கிரனேட்டே உள்ளே வீழ்ந்து வெடித்தது என்று பொலீஸார் கூறினர்.

புலிகளின் அலுவலகத்தில் பணியாற்றிவரும் தாமரைச்செல்வன், நவாஸ் ஆகிய இருவரும் தாக்குதலால் சிறுகாயங்களுக்குள்ளாகினர். அலுவலகம் அருகேயுள்ள கைத்தொழில் நெசவாலையில் காவலாளியாகப் பணியாற்றும் தனபாலன் கடுங்காயத்திற்குள்ளானார். மூவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அலுவலகத்துக்குள் கிரனேட்டை வீசிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று வவுனியா பொலீஸார் கூறினர்.

புலிகளின் வவுனியா அலுவலகம் மீது நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இது குறித்து வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் து.ஞானவேல் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பொலீஸாரும் தாக்குதல் நடந்த இடத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை நடத்தினர். வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியனும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்தத் தாக்குதல் மிகப் பாரதூரமான விடயம் என்று அங்கு கருத்துத் தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல்பணிசெய்வதற்காக வந்திருக்கும் புலிகளின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து துரித விசாரணைகளை நடத்துமாறு பொலீஸாரைப் பணித்தார்.

வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்ட நீதிபதி, அவர்களிடமிருந்து வாக்குமூலங்களையும் பதிவு செய்தார். (எ-க)

## சுமாத்திராவில் பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகின.

டிசெம்பர் 26 ஆம் திகதி இந்தோனேசியாவைத் தாக்கிய பூகம்பம் 9.0 புள்ளியாகப் பதிவாகியது குறிப்பிடத்தக்கது.

சுமாத்திரா தீவின் உள்ளூர் நேரப்படி 11.09 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பரந்தளவில் ஆழிப்பேரலைகள் ஏற்படும் என்று அமெரிக்காவின் பசுபிக் ஆழிப்பேரலை எச்சரிக்கை நிலையம் அவசர அறிவிப்புக்களைச் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு விடுத்தது.

தனது இணையத் தளத்தில் அந்த நிலையம் விடுத்துள்ள அறிவித்தலில் இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் அதிகாரிகள் பாதுகாப்புக்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளது.

இலங்கையில் சுமார் 40 ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டதுடன் ஆசியப் பிராந்தியத்தில் 2 லட்சம் பேர் உயிரிழக்கக் காரணமாக இருந்த டிசெம்பர் 26 ஆழிப்பேரலை ஏற்பட்டு மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் மீண்டும் நில நடுக்கமும் பேரலைகளும் ஏற்பட்டுள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதைத் அடுத்து இலங்கையிலும் அவசர அவசரமாகக் கரையோரப் பகுதியில் உள்ள மக்களுக்கு நேற்றிரவு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கிழக்குக் கரையோரம் உள்ள மக்களை உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்லுமாறு விசேட அதிரடிப் படையினர் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல்களை வழங்கினர். கடற்படையினரும் 'சைரன்'களை ஒலிக்க விட்டு மக்களை உஷார்ப்படுத்தினர்.

இதனையடுத்து கரையோரத்தை அண்டியிருந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் நள்ளிரவில் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் மக்களுக்கான எச்சரிக்கை' அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

வடக்கில் வடமராட்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட சகல கரையோரப்பகுதிகளிலும் மக்கள் உஷார்ப்படுத்தப்பட்டனர். பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை நகர்த்தும் பணிகள் விடிய விடிய நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பூகம்பம் பாதித்த சுமாத்திராவில் ஏற்பட்ட விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. அந்தப் பகுதியில் சிறிது நேரத்தில் கடலில் ஆழிப்பேரலைகள் எழுந்தன என்று கூறப்படுகிறது.

நில நடுக்கத்தால் இந்தோனேசிய நகரான நியாஸ் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக முதலில் வெளிவந்த தகவல்கள் தெரிவித்தன.

இங்கு கட்டடங்கள் பலவும் தகர்ந்து தரைமட்டமாகின என்றும் அஞ்சத்தக்க எண்ணிக்கையில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தாம் நம்புவதாகவும் இந்தோனேசிய அதிகாரிகள் இன்று அதிகாலை தெரிவித்தனர். (ஐ-ஒ-8-7-190)

### மூப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரையோரப் பகுதிக்குச் செல்லவிடாமல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்கள், படைமுகாம் என்பவற்றுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளில் கரையோரங்களில் இருந்து சுமார் 60 வீதமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

மன்னார் கரையோரப் பிரதேசங்களில் இருந்து வெளியேறிய மக்கள், தேவாலயங்களில் தஞ்சம் புகுந்தனர். (ஐ-7-8-190)

### வடமராட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சுனாமி' பற்றிய பீதியும் பதற்றமும் எங்கும் காணப்பட்டது.

வடமராட்சி கிழக்கில் இருந்தும் மக்கள் பாதுகாப்பான பகுதிக்கு இடம்பெயர்ந்து உள் பகுதிகளுக்கு வந்துள்ளனர். தாளையடிப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி வர படையினர் அனுமதித்திருக்கின்றனர்.

வடமராட்சியில் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தும் அவசர பணிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தலைமையிலான குழு ஒன்றும் ஈடுபட்டிருந்தது.

ஏற்கனவே சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கி இருப்போர் நேற்றிரவு பெரும் கலவரமடைந்து காணப்பட்டனர்.

அநாவசியமாக கடற்கரைப்பகுதிக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது . (ஐ-70-173)

### கொலை அலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனர்த்தம் ஏற்படும் சாத்தியங்கள் ஏதும் தோன்றின் அவை குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கும் தயார் நிலையில் பொலீஸார் இருக்கின்றனர் என்றும் நேற்றிரவு கொழும்பில் பொலீஸார் தெரிவித்தனர்.

மீண்டும் ஆழிப்பேரலை ஏற்படும் என்ற அச்சம் காரணமாக மக்கள் நேற்றிரவை பயப்பீதியுடனேயே கழித்தனர்.

கடந்த முறை ஏற்பட்ட ஆழிப்பேரலை யின் தாக்கத்தை விட இந்த முறை தாக்கம் குறைவாகவே இருக்கும் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கும் போதும், இந்தப் பிராந்திய நாடுகளை அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஆழிப்பேரலைகள் தாக்கும் சாத்தியம் இன்று அதிகாலை 3 மணியுடன் முற்றாகவே நீக்கிவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. எனினும், புதிதாகப் பூகம்பம் ஏற்பட்டால் சுனாமி அனர்த்தம் உருவாகலாம் என்பதால் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. (ஐ-ஒ-7-8-190)

VACANCY
Center for Peace and Reconciliation
No.: 08, Grousseault Road, Jaffna, Sri lanka.
மேற்படி நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன.
1. ஆவணப்படுத்தல்
2. உதவி நிர்வாகி
3. வரவேற்பாளர்
இறுதித் திகதி 06.04.2005
குறிப்பு:-
- மேற்படி பதவிகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, எழுதத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தங்கள் சுயவிவரக் கோவையினை தபால் மூலமாக விண்ணப்பிக்கவும்.
~ இயக்குநர் ~
(C-41819) (29-14-17)

BARATHY
சித்தன்கேணி
இணைந்தகணிதம்
A/L 2006
★ வட்டம்
★ S.H.M.
புதன், வியாழன் 4.30
ஆரம்பம்: 30.03.2005
திரு.விஜேந்திரன்
B.Sc. Dip in Ed.
(43628) (29-14-17)

கூல் லெமனேற்றிங்
A4 சைஸ் 1/= மட்டுமே.
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில். T.P: -222 6722

தபால் மூலம்
Cellphone Electronics
Marconi
தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் இலத்திரனியல் மற்றும் செலுலர் தொழிற் பயிற்சிகளைக் கற்க விரும்புபவர்கள் கற்கை நெறி பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள மேலதிக ரூ 5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து அனுப்பவும். கற்கை முடிவில் பயிற்சி, பரீட்சை மூலம் சான்றிதழைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவரும் இணைந்து கொள்ளலாம். கொழும்பு மற்றும் இலங்கையின் சுற்றுப்புறத்தில் இருக்கும் அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.
(C-41856) (29-14-17)
MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd floor, Galle Road, Wellawatta. TP: 2 361362

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org